# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 30

06.08 2023





பணியிடத்தில் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டுமா? 09

கல்கி கற்றல் பலகைகள் 12

ஏ.ஐ. யாருக்கு வில்லன்? 21

# இலங்கையில் அறிமுகமாகவுள்ள யு.பி.ஐ பரிவர்த்தனை முறை

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# தொழில் முனைவோர்களை உருவாக்கும் "வியா விலேஜ்"



- பாரதி -

போர் முடிவுக்கு வந்த பின்னர் வவுனியா, செட்டிகுளம் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் மீளக்குடியேறினார்கள். அப்போது அவர்கள் முன்பாக இருந்த மிகப்பெரிய கேள்வி "வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வது" என்பதுதான். இவர்கள் மீள்குடியேற்றப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டாலும் கூட வழமையான வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தேவையான வசதிகள் எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை.

வீடுகள், தொழில், அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள், போக்குவரத்து என எதுவும் வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட சில பொருட்கள் - மற்றும் உலர் உணவுகளும் நிவாரணமாக வழங்கப்பட்டன. ஆனால், இந்த நிவாரணத்தை நம்பியே காலம் முழுவதும் இருந்துவிட முடியாது என்பது யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட நிலையில்தான் அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருந்த சுட்டா ரட்ணாதிக்கம் (Chutta Ratnathicam) இந்த மக்கள் தமது சொந்தக் கால்களிலேயே கௌரவமாக வாழ்வதற்காக ஏதாவது செய்தாகவேண்டும் என்று நினைத்தார். இலங்கை வந்திருந்த அவர் நிலைமைகளை நேரில் சென்று அவதானித்தார்.

வன்னி ஒரு பெரு நிலப்பரப்பு. அதில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த ஒரு பகுதியைத் தெரிவு செய்து அந்தக் கிராம மக்களின் பொருளாதாரத்துக்கு எதனையாவது செய்ய வேண்டும் என்ற அவரது சிந்தனையில் உதித்ததுதான் "வியா விலேஜ்" (Via Village) என்ற செயற்திட்டம். அதாவது "கிராமத்தின் ஊடாக" என்ற செயற்றிட்டம்.

### வட்டி இல்லாத கடன்கள்

பொருளாதார ரீதியாக கிராமத்தில் தொழில் முயற்சிகள், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது. விவசாயத்தில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவது, சிறிய கைத் தொழில் முயற்சிகளை உருவாக்குவது அல்லது ஏற்கனவே உள்ள அவ்வாறான முயற்சிகளை மேம்படுத்துவது. அதற்குத் தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது. இதற்காக ஆலோசனைகள், உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பது என்பவற்றுடன் சந்தைகளை அறிமுகம் செய்வது என்பதான் அவரது திட்டம். அதன் மூலமாகக் கிராமத்தை முன்னேற்றுவது என்பதுதான் அவருடைய கனவு!

வவுனியாவின் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான ஈச்சங்குளத்தையும், அதனையடுத்துள்ள சில பகுதிகளையும் இதற்காகத் தெரிவு செய்த அவர், மீள்குடியேற்றக் காலப்பகுதியான 2010 -2011 வருடங்களில் இந்தப் பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு வசதியாக வட்டியற்ற கடன்களை முதலில் வழங்கினார். ரட்ணாதிக்கத்தின் குடும்பத்தினரும் அவருடன் இந்த முயற்சியில் இணைந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கடன்கள் மீளப்பெறப்படும்போது அந்தத் தொகை மற்றொருவருக்கு வழங்கப்பட்டது. இதன் மூலமாக அதிகளவானோர் பயனைப்பெற முடிந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவுக்குத் தமது பிரதேசங்களில் மீள்குடியேறிய நிலையில், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், மற்றும் தேவைகளை அடையாளம் கண்ட சுட்டா ரட்ணாதிக்கம், அவற்றைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துடனும், கிராம மக்களைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் இலக்குடனும் 2014 இல் "வியா விலேஷ்" திட்டத்தைத் தன்னுடைய அடுத்த கட்டமாக ஆரம்பித்தார். இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தமது தொழில் முயற்சிகளை மேலும் மேம்படுத்துவது, அவர்களுக்கான புதிய சந்தை வாய்ப்புக்களை கண்டறிந்து அறிமுகப்படுத்துவது, அல்லது புதிய சந்தைகளை உருவாக்குவது என்பது அவரது திட்டமாக இருந்தது.

கிராம மக்களின் வருமானத்தை அதிகரிப்பதுதான் இந்தத் திட்டத்தின் பிரதான இலக்கு. இதன் மூலமாக அந்தக் கிராமத்தை



முன்னேற்ற முடியும் என்பது அவரது கனவு. இதற்காக ஈச்சங்குளத்தில் அலுவலகம் ஒன்றையும் அவர் அமைத்தார். கிராம மக்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய சிலரை இதற்காக அவர் தெரிவு செய்து பணியில் ஈடுபடுத்தினார்.

### நிபுணர்களின் பங்களிப்பு

வியா விலேஜின் செயற்பாடுகள் எவ்வாறுள்ளது. கிராம மக்கள் இதனால் எந்தளவுக்குப் பலனைப் பெற்றுள்ளார்கள்? என்பதை நேரில் அறிந்துகொள்வதற்காகக் கடந்த வாரம் அங்கு சென்ற போது, ஆச்சரியமான அனுபவங்களே கிடைத்தன. இந்தக் கிரா மத்தில் சுமார் 300 க்கும் அதிகமானோர் வியா விலேஜ் அமைப்பின் செயற்பாடுகள் மூலமாகப் பயனடைந்திருக்கின்றார்கள். அதாவது சுட்டாவின் கனவை நனவாக்கும் வகையில் இவர்களுடைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

வியா விலேஷ் அமைப்பின் செயற்பாட்டு முகாமையாளர் ரி.சிவகுமார், செயற்பாட்டு உதவியாளர் ஆர்.ஷாமிலன் ஆகியோரை அங்கு சந்தித்துப் பேசியதுடன், அந்தக் கிராமத்தில் வியா விலேஷ் திட்டத்தின் மூலமாகப் பலன்பெற்ற சிலரையும் சந்திக்கவும், அந்தத் திட்டங்களை நேரில் பார்க்கவும் முடிந்தது. வியா விலேஷின் வர்த்தக ஆலோசகராக அநுருத்த ரணசிங்கவும், செயற்பாட்டு ஆலோசகராக ரி.சோமேஸ்வரனும் செயற்பட்டுவருகின்றார்கள்.

அதாவது, நிதி, விவசாயம், கணக்கியல்துறை, சமூக அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் "வியா விலேஷ்" திட்டத்தில் அர்ப்பணிப்புடன் பங்கேற்கின்றார்கள்.

"வியா விலேஜ்" திட்டத்தை உருவாக்கிய சுட்டா ரட்ணாதிக்கம் சில மாதங்களுக்கு முன்னர் மரணமடைந்தது ஒரு பின்னடைவாக அமைந்திருந்தாலும் கூட, தமது தந்தையின் இந்தக் கனவுத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அவரது பிள்ளைகள் உறுதியாக இருப்பதால், அவர்களது திட்டங்கள் எந்தவிதமான தொய்வும் இல்லாமல் முன்னெடுக்கப்படுகின்றன. "சுட்டா ரட்ணாதிக்கம்" ஒவ்வொரு வருடமும் ஈச்சங்குளத்துக்கு வருகை தந்து "வியா விலேஜ்" திட்டத்தின் செயற்பாடுகளை நேரில் அவதானித்து வந்துள்ளார். அத்துடன் புதிதாக என்ன தேவை? என்பதை அறிந்து அதற்கான ஆலோசனைகளையும் வழங்கிவந்திருந்தார்.

இப்போது இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு முக்கிய ஆலோசகராக ஓய்வுபெற்ற கணக்காளரான ரி.சோமேஸ்வரன் பணிபுரிகளின்றார். அவர் கொழும்பு றோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மாதாந்தம் வவுனியாவுக்கு வந்து இந்தத் தீட்டம் எவ்வாறு செயற்படுகின்றது, இதனை மேலும் மேம்படுத்துவதற்கு என்ன செய்ய முடியும் என்பவற்றை அவர் ஆராய்ந்து வருகின்றார்.

### வியாபாரப் பதிகள்

"இந்தக் கிராமத்திலுள்ள மக்களைப் பொறுத்தவரையில் சுய தொழில் முயற்சிகளில் அல்லது சிறிய கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது அவர்கள் இரண்டு பிரச்சினைகளுக்கு பிரதானமாக முகங்



கொடுக்கின்றார்கள். முதலாவது – வியாபாரப் பதிவு. இரண்டாவது வங்கிக் கடன்களைப் பெறும் போது எதிர்கொள்ளும் நெருக்கடிகள்" என்று சுட்டிக்காட்டும் செயற்பாட்டு முகாமையாளர் ரி.சிவகுமார், இந்த இரண்டு விடயங்களையும் தமது அமைப்பு பொறுப்பெடுத்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக சுயதொழில் முயற்சிகள், சிறிய கைத் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்வதற்காகச் செல்லும்போது முன்வைக்கப்படும் நிபந்தனைகள் கேள்விகளால், கிராம மக்கள் பெரும் சிரமப்படுகின்றார்கள். இவ்வாறான நிலைமைகளில் அவற்றைப் பதிவு செய்வதற்கான பொறுப்பை தாமே ஏற்றுக்கொள்வதாக சிவகுமார் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல தொழில் முயற்சிகளைத் தாம் பதிவு செய்துகொடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதன் மூலமாக சிறிய தொழில் முயற்சியாளர்கள் தமது முதலாவது தடையைத் தாண்டுவதற்கு "வியா விலேஜ்" உதவுகின்றது.

### வங்கிக் கடன் வசதிகள்

இரண்டாவதாக, வங்கிக் கடன்களைச் சிறிய தொழில் முயற்சிகளுக்குப் பெற்றுக்கொள்வதில் கிராம மக்களுக்கு நெருக்கடிகள் உள்ளன. குறிப்பாக வங்கிகள் கொடுக்கும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பவர்கள் (guarantor) ஒன்று அல்லது இரண்டு பேர் தேவை. அவர்கள் குறிப்பிட்ட வங்கியில் கணக்கு வைத்திருப்பவராகவும், மாதாந்தம் குறிப்பிட்ட தொகையை நிரந்தர வருமானமாகப் பெறுபவராகவும் இருக்க வேண்டும் என்பது போன்ற பல நிபந்தனைகளை வங்கிகள் வைத்திருக்கின்றன. கிராம மக்களைப் பொறுத்தவரையில் அவ்வாறு உத்தரவாதம் அளிக்கக் கூடியவர்களை தேடிக்கண்டுபிடிப்பது இலகுவானதல்ல. அவ்வாறு தேடிக்கண்டு பிடித்தாலும் அவர்கள் உத்தரவாதமிக்க முன்வருவார்களா? என்பது அடுத்த கேள்வி.

இந்த நிலைமையில்தான் அந்த உத்தரவாதத்தை வழங்குவதற்கு "வியா விலேஜ்" அமைப்பு முன்வந்திருப்பதாகச் சொல்கிறார் சிவகுமார். இதற்காக வங்கிகளுடனும் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அதற்காக உடன்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்கள். அரசாங்க வங்கிகள் மட்டுமன்றி, தனியார் வங்கிகள் சில கூட இவ்வாறு சிறிய தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன்களை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றன என்பது முக்கியமான ஒரு விடயம்.

இவ்வாறு கடன் பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களின் விபரங்கள் வியா விலேஜ் அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களது தொழில் முயற்சியின் தன்மை போன்றன கவனத்திற்கொள்ளப்பட்டு வங்கிகளுக்கு அதற்கான பரிந்துரைகளுடன் அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர் வங்கி அதிகாரிகள் வியா விலேஜ் அலுவலகத்துக்கே வந்து அது தொடர்பான நடைமுறைகளை முன்னெடுக்கின்றார்கள்.

நாம் "வியா விலேஜ்" அலுவலகத்துக்குச் சென்றிருந்தபோது கூட, சிறிய தொழில் முயற்சிகளுக்காகக் கடன் பெற விண்ணப்பித்திருந்த சில பெண்கள் அதற்காக வந்திருந்தமையையும், வங்கி அதிகாரி ஒருவர் அதற்கான நடைமுறைகளை மேற்கொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. சிறிய அல்லது சுய தொழில்முயற்சியாளர்களுக்கு இது மிகப்பெரிய வாய்ப்பு.

### குறைந்த வட்டியில்

சிறிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் 1,50,000 ரூபாவிலிருந்து 4,00,000 ரூபா வரையில் இவ்வாறு கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது என்று சிவகுமார் தெரிவித்தார். கடனை மீளச் செலுத்துவதற்கான கால எல்லை 18 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் வரையில் நீண்டு செல்கின்றது. இதற்கான வட்டி 9 வீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"வியா விலேஜ்" அமைப்பு இவ்வாறு கடன் பெற்றுக்கொண்டவர்களின் தொழில் முயற்சிகளைக் கண்காணிப்பதுடன், அவர்களுக்குத் தேவையான நிபுணத்துவ

(06ஆம் பக்கம் பார்க்க)

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0764438620

## தென்னை முக்கோண வலையம்

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் மையமாகக் கொண்டு வட மாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்கவுள்ளதாகப் பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்திருக்கின்றார். தென்பகுதியில் ஏற்கனவே இவ்வாறான தென்னை முக்கோண வலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. பாரம்பரியமாகத் தென்னை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவந்த புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களே தென்னை முக்கோண வலையமாக ஏற்கனவே பிரகடனம் செய்யப்பட்டு, தேங்காய் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.

ஆனால், அந்தப் பகுதியில் வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் காரணமாகத் தென்னைப் பயிர்ச்செய்கைக்கான நிலப்பரப்பு குறுகிவிட்டதாகவும் அரசாங்கம் தற்போது வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் தென்னைப் பயிர்ச்செய்கையை விஸ்தரிக்கும் வேலைத்திட்டங்களில் இறங்கியுள்ளதாகவும் சில வருடங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே தற்போது வடக்கில் அதிகளவுக்குத் தென்னை உற்பத்தி செய்யப்படும் மூன்று மாவட்டங்களை முக்கோண வலையமாக அமைச்சர் அறிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். செப்ரெம்பர் 02 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக தென்னைத் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவை மையமாகக் கொண்டு வட மாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோணத்தை ஆரம்பிக்க இருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டார். வட பகுதியையும் மையமாகக் கொண்டு அபிவிருத்திக்கான திட்டமிடல்களை அரசாங்கம் முன்னெடுப்பது முக்கியமானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

இலங்கையின் பாரம்பரியமான ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாகத் தென்னை உற்பத்திகளும் இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நிலையில், தென்னை ஏற்றுமதியை மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் இந்தத் திட்டம் உதவலாம். தேங்காய் ஏற்றுமதி மூலமான வருமானம் வரலாறு காணாத வகையில் அண்மைக்காலமாக அதிகரித்துவருவது புள்ளிவிபரங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. தெங்கு உற்பத்தியில் காணப்படும் பல்வகைத் தன்மையே இதற்குப் பிரதான காரணமாகச் சொல்லப்படுகின்றது.

வடபகுதியைப் பொறுத்தவரையில் போர் காரணமாக பெருந்தொகையான தென்னந்தோட்டங்கள் அழிக்கப்பட்டன. ஆனால், இப்போது வடக்கில் புதிதாகத் தென்னந் தோட்டங்கள் பெருமளவுக்கு உருவாக்கப்பட்டிருப்பதை காண முடிகின்றது. தென்னையிலிருந்து பெறக்கூடிய பெறுமதி சேர் உற்பத்திகளுக்கு அதிகளவுக்கு ஊக்குவிப்புக்களையும் உதவிகளையும் வழங்குவதன் மூலமாக ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் அதிக வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கலாம். அரசாங்கம் இவற்றில் கவனம் செலுத்தும் என நம்பலாம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### யாழ்ப்பாணத்தில் காலணி உற்பத்தி

யாழ்ப்பாணத்தில் இறப்பர்க் காலணிகள் தயாரிக்கப்படுவது குறித்த கடந்த வாரக் கட்டுரை சிறப்பானதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் பல கைத்தொழில் கள் கடந்த காலங்களில் இருந்துள்ளன. மில்க்வைற் உற்பத்திகளிலிருந்து ஆணி உற்பத்தி வரை பெருமளவு உற்பத்திகள் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைச் சந்தை வரையில் சென்றிருக்கின்றன. ஆனால், போர்க் காலத்தில் இவை பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்திருந்தன. போருக்குப் பின்னர் இப்போதுதான் இது போன்ற சில முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருவது ஆரோக்கியமானதாக இருக்கின்றது. இது போன்ற கைத்தொழில்கள் மேலும் வளர்ச்சியடைவது எமது பொருளாதாரத்துக்குப் பலத்தைக் கொடுப்பதாக அமையும்.

**என்.விக்னஸ்வரன், வட்டுக்கோட்டை**

### விலங்குகளின் இரத்தப் பரிசோதனை

விலங்குகளின் இரத்தப் பரிசோதனைகளை எங்கு மேற்கொள்வது என்ற தலைப்பில் டொக்டர் கிருப்பானந்தகுமாரன் எழுதிய கட்டுரையை உங்களுடைய கடந்த வார இதழில் படித்தேன். கால்நடை மருத்துவர்கள் எதிர்கொண்டுள்ள முக்கியமான ஒரு பிரச்சினையை விளக்கமாக எழுதியிருந்தார். இந்தப் பிரச்சினைக்குக் காரணம் அறியாமையா? எம்மைப் போன்ற கால்நடைகளை வைத்திருப்பவர்களும் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் பெருமளவுக்கு இருப்பதால் இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வைக் காண்பது அவசியம்.

**எஸ்.மரியதாஸ், கோப்பாய், யாழ்ப்பாணம்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------

**முகவரி** - ----------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------

**சந்தாக் காலம்** - ----------------------------------------

**செலுத்திய தொகை** - ----------------------------------------

**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,57,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,72,150 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவது பொருளாதாரத்துக்கு எந்தளவுக்கு உதவும்?

**சகுந்தலாதேவி,**
**வண்ணார்பண்ணை.**

**பதில் -** நிச்சயமாக அது பெரியளவுக்கு உதவுவதாகத்தான் இருக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களின் போது இது தொடர்பாக முக்கியமாகப் பேசப்பட்டுள்ளது. அதனையடுத்தே இது குறித்த கருத்துப்பரிமாற்றங்கள் இப்போது இடம்பெறுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க 2002 காலப் பகுதியில் பிரதமராக இருந்தபோதும் இது தொடர்பாகப் பேசியிருக்கின்றார். ஆக, இது ரணில் விக்கிரமசிங்கவின் யோசனை தான். ஏற்கனவே இதேபோன்ற தரைவழிப் பாதை ஒன்று இருந்ததாகப் புராணக் கதைகளும் இருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் இந்த யோசனை முன்வைக்கப் பட்டது.

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் சுமார் 23 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தரைவழிப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால் மிகவும் குறைந்த செலவில் இதனைச் சுமார் ஒரு மணி நேரத்தில் கடந்துவிட முடியும். இந்தியாவின் பொருளாதாரம் பல்வேறு துறைகளில் பரந்து விரிந்ததாக இருப்பதால், இவ்வாறான தரை வழிப் பாதை அமைகைகப்படுவது இரு நாடுகளின் பொருளாதாரத்துக்கும் முக்கியமானதாக இருக்கும்.

பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி, கலை, கலாசாரத் தொடர்புகளை வளர்ப்பதற்கும் இது முக்கியமானதாக அமையும். குறைந்த செலவில் வந்து செல்லலாம் என்பதால், உல்லாசப் பயணிகள் அதிகளவுக்கு இலங்கைக்கு வந்து செல்வதற்கு இது துணைபுரியும். ஜூலை மாதத்தில் இலங்கை வந்த உல்லாசப் பயணிகளில் அதிகளவானவர்கள் இந்தியர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது 16 வீதமானவர்கள் இந்தியர்கள். அதனால், தரை வழிப்பாதை திறக்கப்பட்டால், மேலும் அதிகமான இந்தியர்கள் உல்லாசப் பயணிகளாக வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது.

ஆனால், இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதுதான் முக்கியமான கேள்வி. இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவையை நடத்துவதிலேயே பலத்த இழுபறி காணப்பட்டது. கப்பல் சேவை குறித்து பல மாதகாலமாகப் பேசப்படுகின்றது. ஆனால், இதுவரையில் அது சாத்தியமாகவில்லை. இந்த நிலையில் தரை வழிப்பாதை என்பதையிட்டு ஜனாதிபதி சொல்லியிருந்தாலும், அது எந்தளவுக்கு சாத்தியமான ஒன்று என்பது அவருக்குத் தெரிந்திருக்கும்.

இனவாத அடிப்படையில் செயற்படும் அரசி யல்வாதிகளும். அதிகாரிகளும் இதற்கு உடன்படுவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. ஏற்கனவே பௌத்த பிக்குகள் சிலர் இதற்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். தரைப் பாதை அமைக்கப்பட்டால் சில மணி நேரத்துக்குள் இலங்கையை இந்தியா கைப்பற்றி விடலாம் என இந்திய எதிர்ப்பை அவர்கள் கிளப்புகின்றார்கள். இந்த நிலையில் தரைப் பாதை என்பது ஒரு கனவுத் திட்டமாக மட்டுமே இருக்க முடியும்.

## கேளுங்கள் தருகின்றோம்

**தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -**
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 500/= |
| தக்காளி | - 250/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 120/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 150/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 300/= |
| வெண்டிக்காய் | - 150/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 180/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 300/= |
| போஞ்சி | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 199/= |
| கனடா டொலர் - | 228/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 335/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 227/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 390/= |
| சுவிஸ் பிராங் - | 347/= |
| அமெரிக்க டொலர் - | 308/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 212/= |
| கனடா டொலர் - | 242/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 353/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 241= |
| ஸ்ரோலிங் பவுண் - | 410/= |
| சுவிஸ் பிராங் - | 369/= |
| அமெரிக்க டொலர் - | 322/= |



(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றது. கடன் மீளச் செலுத்தப்படுவதையும் அவர்கள் கண்காணிக்கின்றார்கள்.

இதனைவிட விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மிகவும் குறைந்த வட்டியில் - அதாவது 4 முதல் 8 வீதம் வரையிலான வட்டியில் கடன் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இதற்காக 40,000 ரூபா முதல் இந்தக் கடன்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு 100 க்கும் அதிகமான விவசாயிகள், கமக்காரர்கள் கடன்களைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான உத்தரவாதத்தையும் "வியா விலேஜ்" அமைப்பே வழங்குகின்றது.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளையும் "வியா விலேஜ்" முக்கியமாக முன்னெடுக்கின்றது. இயற்கை விவசாயத்தில் ஈடுபடுபவர்கள், மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பெறுமதிசேர் உற்பத்திகளில் ஈடுபட்டிருப்பவர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது, தேவையான ஆலோசனைகளைப் பெற்றுத்தருவது என்பவற்றிலும் வியா விலேஜ் கவனம் செலுத்துகின்றது. அத்துடன் இயற்கை விவசாய உற்பத்தி என்பதற்கான சான்றிதழையும் அவர்கள் பெற்றுக்கொடுக்கின்றார்கள்.

### பூச்சாடித் தொழிற்சாலை

வியா விலேஜ் அமைப்பின் உதவியுடன் பல தொழில்முனைவோர் உருவாகியிருந்தாலும், குறிப்பிட்ட சிலரை நேரில் சந்திக்கவும் அவர்களுடைய தொழில் முயற்சிகளை நேரில் பார்வையிடவும் முடிந்தது. வவுனியா ஈச்சங்குளத்தில் உள்ள ரவீந்திரன் இதில் குறிப்பிடத்தக்கவர். ஒரு மேசன் தொழிலாளியாக இருந்த அவர், பூச்சாடி உற்பத்தியில் ஈடுபட விரும்பியதால், "வியா விலேஜ்" அமைப்பின் உதவியைப் பெற்றுக்கொண்டார். அவருக்குத் தேவையான கடன் வசதியை அவர்கள் பெற்றுக்கொடுத்ததுடன், வியாபாரப் பதிவுடன் நிதி ஆலோசனை, உற்பத்திக்கான தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றையும் பெற்றுக்கொடுத்திருக்கின்றார்கள். அதனைவிடச் சந்தை வாய்ப்புக்களும் அவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார் சிவகுமார்.

இதன் மூலமாக ஒரு தொழிலாளியாக இருந்த ரவீந்திரன் இன்று ஒரு தொழில் முனைவோராகிவிட்டார். பல்வேறு வடிவங்களில், குறைந்த விலையில் பூச்சாடிகள் அவர்களால் செய்யப்படுகின்றது. அவற்றைவிட அழகிய துளசி மாடம் கூட அவர்களால் செயற்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. ரவீந்திரனுக்கு உதவியாக அவரது மனைவியும் இதனை நிர்வகிக்கின்றார். வவுனியாவில் பல இடங்களிலிருந்தும் வரக்கூடிய ஓடர்களுக்கு நேரடியாக வீடுகளுக்கே இவர்கள் பூச்சாடிகளை விநியோகம் செய்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது ஓர் உதாரணம். இது போன்ற பல தொழில்முனைவோர்களை வியா விலேஜ் உருவாக்கியிருக்கின்றது.

### பயனாளர்கள் தெரிவு

பயனாளர்களை எவ்வாறு தெரிவு செய்கின்றீர்கள்? எனக் கேட்டபோது, இதற்காகத் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்துக் கிராமங்களில் தாம் விநியோகம் செய்திருப்பதாகச் சிவகுமார் குறிப்பிட்டார். அவ்வாறு விநியோகிக்கப்பட்ட பிரசுரம் ஒன்றைச் ஷாமிலன் தந்தார்.

அதில், மேசன் தொழில், தச்சுத்தொழில், உணவுப் பொருள் உற்பத்தி, மின் ஒட்டு வேலை, வாகனப் பழுது பார்த்தல், ஏனைய சிறு வியாபாரங்கள் போன்ற தொழில்களில் ஈடுபடுபர்கள் அந்தத் தொழில் முயற்சிகள் மூலமாக வருமானத்தை அதிகரிக்க



"வியா விலேஜ்" உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அல்லது புதிய தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் இலவசமாக வழங்கப்படும். வியாபாரப் பதிவு, புதிய சந்தைகள் இணைப்பு, நிதி ஆலோசனை, உற்பத்தித் தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றுக்குத் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் எனச் சிவாவின் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது. (076 911 5539)

உங்களிடமும் புதிய தொழில் முயற்சிக்கான திட்டம் ஏதாவது இருந்தால் அவர்களுடன் தொடர்புகொள்ளலாம்.



## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

--------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

--------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

--------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

--------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

--------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

--------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

--------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

--------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

--------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

--------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

--------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

--------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஒளடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------

### காணி விற்பனைக்கு

**A9** வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

--------------------------------------

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

--------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

--------------------------------------

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

--------------------------------------

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார் படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

--------------------------------------

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457






- கார்த்திகா ராஜேந்திரன் -

# பணியிடத்தில் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டுமா?

பெரும்பாலானோர் தினமும் 8 முதல் 9 மணி நேரம் வேலை செய்கிறார்கள். குடும்பத்தினர், நண்பர்களைவிடப் பணியிடத்தில் அதிக நேரம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதனால், ஆரோக்கியமான பணியிடச் சூழலை உறுதிப்படுத்துவது அவசியம். பாலினப் பாகுபாடு, பாரபட்சமாக நடத்தப்படுதல், சிறுமைப்படுத்தப்படுதல் ஆகியவற்றை எதிர்கொள்ளும்போது பணியிடச் சூழல் கசப்பாகக்கூடும்.

ஆரோக்கியமற்ற சூழலால் உடல்நலம், மனநலம் பாதிப்புக்குள்ளாகும். இந்த நிலையிலிருந்து விடுபடச் சில உத்திகளைக் கையாளலாம்.

### ஆரோக்கியமற்ற பணிச்சூழல் என்பது என்ன?

* பணியின்போது எல்லாவற்றையும் சகித்துகொள்வது. இது தொடர்ந்தால் பின்பு பெரிய பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.
* உயரதிகாரிகள் அல்லது சக ஊழியர்களின் கசப்பான நடவடிக்கைகள்.
* திறமை இருந்தும் வாய்ப்புத் தர மறுப்பது, வளர்ச்சியை முடக்குவது, பாராட்ட மறுப்பது, குறைகளைப் பூதாகரமாக்குவது, விமர்சனங்களைப் புறந்தள்ளுவது போன்ற செயல்களால் பணியிடச் சூழல் அதிருப்தியை உருவாக்கலாம். இது போன்று இன்னும்சில மாறுபட்ட நடவடிக்கைகளைக் கண்டால் விழித்துக்கொள்ள வேண்டும்.

அவை:

* புறம் பேசுதல்
* சிறுமைப்படுத்துதல்
* பாரபட்சம் காட்டுதல்
* வெளிப்படைத்தன்மை இல்லாத பேச்சு
* பணிச்சுமை பற்றிப் பேசாதிருத்தல்

அடிக்கடி பணியாளர் மாற்றங்கள்

> ஆரோக்கியமற்ற பணியிடச் சூழலால் ஊழியர்களுக்கு மட்டும் பிரச்சினை கிடையாது. அது ஒட்டுமொத்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கும். இதனால், மனதளவில் சோர்வு உண்டாகிப் பணிகளை முடக்கும்.

### விளைவுகள் என்ன?

ஆரோக்கியமற்ற பணியிடச் சூழலால் ஊழியர்களுக்கு மட்டும் பிரச்சினை கிடையாது. அது ஒட்டுமொத்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கும். இதனால், மனதளவில் சோர்வு உண்டாகி பணிகளை முடக்கும். இதைச் சீரமைக்காவிட்டால் அணியின் ஒட்டுமொத்தப் பணியிலும் எதிரொலித்துச் சிக்கலை அதிகரிக்கும்.

### என்ன செய்யலாம்?

* வேலையைப் பாதிக்கும் செயல்கள், வேலை சாராத பேச்சுக்களைத்தவிர்க்கலாம்.
* அதில் சகப் பணியாளர் ஆர்வமாக இருந்தால், அவரிடமிருந்து விலகி இருக்கலாம்.
* பணியிடத்தில் சகப் பணியாளர் என்பதைத் தாண்டி நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது.
* பணியிடத்தில் நடைபெறும் எதிர்மறை விஷயங்களை ஆவணப்படுத்துங்கள். எல்லை மீறிய பிரச்சினை எனும்போது புகார் அளிக்க இந்த ஆவணங்கள் பயன்படும்.
* கசப்பான பணியிடச் சூழலைச் சமாளிக்க பணியிடத்தை விட்டு வெளியேறுவது மட் டுமே தீர்வு அல்ல. ஒவ்வோர் இடத்திலும் இதுபோன்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம்.
* முதலில் பணியிடம் ஆரோக்கியமற்ற முறையில் இருந்தால், சில முன்னெடுப்புகள் மூலம் சீரமைக்க முயல வேண்டும். அது முடியாதபட்சத்தில், வேறு பணிக்கு மாறுவது பற்றித் திட்டமிடலாம்.

### மாற்றத்துக்கு என்ன வழி?

* பணியிடச் சூழலால் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கும் சக பணியாளருக்கு ஆதரவு அளிக்கலாம். இதிலிருந்து விடுபடுவதற்கான உத்திகளை அவர்களிடம் பகிரலாம்.
* ஒருவர் மனதளவில் பாதிக்கப்பட்டதில் உங்களுக்கும் பங்கு இருந்தால் அவற்றை திருத்திக்கொள்ளலாம்.
* ஆரோக்கியமான பணியிடச் சூழலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடலாம். இதுபோன்ற எண்ணம் கொண்டவர்களுடன் நட்புப் பாராட்டிக் கூட்டாக இணைந்து பணியிடச்சூழலை மாற்றலாம்.

# இலங்கையில் அறிமுகமாகவுள்ள யு.பி.ஐ பரிவர்த்தனை முறை






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

சிங்கப்பூர், பிரான்ஸ் வரிசையில் தற்போது இந்தியா - இலங்கை இடையே யு.பி.ஐ பரிவர்த்தனை மேற்கொள்வதற்கு புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்தியாவில் யு.பி.ஐ பரிவர்த்தனை முறை ஒவ்வொரு ஆண்டும் பிரபலமடைந்து வருகிறது. யு.பி.ஐ பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையும், மதிப்பும் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. சிறு வியாபாரிகள் முதல் பெரிய வணிக வளாகங்கள் வரை எல்லா இடங்களிலும் யு.பி.ஐ பரிவர்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இது மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கு இடையே யு.பி.ஐ பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்த ரிசர்வ் வங்கியும் இந்திய அரசும் முயற்சித்து வருகின்றன. இந்தியா - இலங்கை இடையே யு.பி.ஐ பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான இந்த ஒப்பந்தத்தால் நிதிநுட்ப இணைப்பு அதிகரிக்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தை மேற்கொண்டபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“மாற்றம் ஒன்றே மாறாதது” என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. உலகம் தோன்றியது முதல் மாறாதது மாற்றம் ஒன்றுதான். என்றாலும் மாற்றத்தைத் தொடக்கத்தில் எதிர்ப்பது என்ற ஒன்றும் மாறாததாகவே இருந்து வந்திருக்கின்றது. அதுவும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நமக்குப் புரியாத ஒன்றை எதிர்ப்பது மனித குலத்தின் வழக்கம். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும் விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கத்தை மனிதன் ஏற்றாக வேண்டியது காலத்தின் கட்டாயம்.

வங்கித் துறையும் தொழினுட்ப வளர்ச்சியும் இதில் குறைந்துவிடவில்லை. வங்கித்துறையினால் வங்கி பரிவர்த்தனைகளை எளிதாகச் செய்வதற்கு வசதியாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒன்றுதான் யு.பி.ஐ (UPI) ஆகும். அதாவது, ஒருங்கிணைந்த பரிவர்த்தனைத் தரவு (Unified Payments Interface). யு.பி.ஐ / UPI இந்த வார்த்தையை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அது என்ன? எப்படிச் செயல்படுகிறது? என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. எந்த ஒரு மாற்றத்தையும் புரிந்து செய்யும் போது அதை ஏற்றுக்கொள்ளத் தாயாராவது எளிது என்பதற்கேற்ப இங்கு யு.பி.ஐ/ UPI பேமெண்ட்டுகளில் என்ன நடக்கிறது என்பதை அலசுவோம்.

யுனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்/பேஸ் (யுபிஐ) (Unified Payments Interface (UPI)) என்பது 2016 ஆம் ஆண்டில் இந்தியத் தேசிய கொடுப்பனவுக் கழகத்தால் (National Payments Corporation of India (NPCI)) உருவாக்கப்பட்ட நிகழ்நேர கட்டண முறை ஆகும். இது பயனர்கள் தங்கள் மொபைல் ஃபோன்களைப் பயன்படுத்தி வணிகர்கள், நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு உடனடிப் பணம் செலுத்த அனுமதிக்கிறது. UPI என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமான கட்டண முறைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மாதமும் 1.5 பில்லியன் பரிவர்த்தனைகள் செயலாக்கப்படுகின்றன.

2022இல் இந்தியாவும் இலங்கையும் UPII ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த உடன்படிக்கையானது நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல், செயற்றிறனை அதிகரிப்பது மற்றும் செலவுகளைக் குறைப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. யு.பி.ஐ/UPI என்பது மிகவும் அணுகக்கூடிய கட்டண முறையாகும். ஏனெனில் இதை ஸ்மார்ட்போன் மற்றும் வங்கிக் கணக்கு உள்ள எவரும் பயன்படுத்த முடியும். 70%க்கும் அதிகமான மக்கள் முறையான வங்கிச் சேவைகளைப் பெறாத இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கான மதிப்புமிக்க கருவியாக இது அமைகின்றது.

மக்கள் பணம் செலுத்துவதையும் பெறுவதையும் எளிதாக்குவதன் மூலம் இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை அதிகரிக்க யு.பி.ஐ/UPI உதவும். எடுத்துக்காட்டாக, பொருட்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் செலுத்தவும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்குப் பணம் அனுப்பவும் மற்றும் பயன்பாட்டு பற்றுச்சீட்டின் கொடுப்பனவினை செலுத்தவும் யு.பி.ஐ/ UPI பயன்படுத்தப்படலாம். இது பணத்தின் பயன்பாட்டினை பாரிய அளவில் குறைக்க உதவுகின்றது.

யு.பி.ஐ/UPI மிகவும் திறமையான கட்டண முறையாகும். ஏனெனில் இது பயனர்களை உடனடியாகப் பணம் செலுத்த அனுமதிக்கிறது. இது வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தலாம். ஏனெனில் அவர்கள் காசோலைகள் அல்லது ஏனைய முறைமைகளில் மட்டும் முழுதுமாகத் தங்கியிருக்க வேண்டியதில்லை.

வணிகங்கள் பரிவர்த்தனைகளை நடத்துவதை எளிதாக்குவதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்றிறனை மேம்படுத்தவும் யு.பி.ஐ / UPI




உதவும். எடுத்துக்காட்டாகச்சப்ளையர்களுக்கு பணம் செலுத்தவும் ஊதியம் செலுத்தவும் வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் வசூலிக்கவும் யு.பி.ஐ / UPI பயன்படுத்தப் படலாம். இது இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான செலவைக் குறைக்க உதவும். யு.பி.ஐ / UPI என்பது மிகவும் செலவு குறைந்த கட்டண முறையாகும். ஏனெனில் இதற்கு எந்தவிதமான உட்கட்டமைப்பும் தேவையில்லை. இதன் பொருள் வணிகர்கள் அல்லது நுகர்வோர் யு.பி.ஐ / UPI ஐப் பயன்படுத்துவதற்கு எந்தக் கட்டணமும் இல்லை. வர்த்தகர்கள் புள்ளி-விற்பனை முனையங்கள் point-of-sale (POS) அல்லது பிற கட்டணச் செயலாக்கக் கருவிகளில் முதலீடு செய்வதற்கான தேவையை நீக்குவதன் மூலம் இலங்கையில் வணிகம் செய்வதற்கான செலவைக் குறைக்க யு.பி.ஐ/UPI உதவும். இது வணிகங்களுக்கு கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்தலாம். அதன் செயற்பாடுகளில் மீண்டும் முதலீடு செய்யலாம்.

இலங்கையில் யு.பி.ஐ / UPI இன் நடைமுறைப்படுத்தல் இன்னும் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. ஆனால் அது பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளது. NPCI பல இலங்கை வங்கிகளுடன் UPII வெளியிடுவதற்கு கூட்டுச் சேர்ந்துள்ளது. மேலும் UPI இயக்கப்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை வரும் மாதங்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அரசாங்கமும் UPI முன்முயற்சிக்கு ஆதரவாக உள்ளது. மேலும் அதை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, அரசு நிறுவனங்களால் செய்யப்படும் UPI கட்டணங்களுக்கான 1% பரிவர்த்தனைக் கட்டணத்தை அரசாங்கம் தள்ளுபடி செய்துள்ளது. இலங்கையில் UPII நடைமுறைப்படுத்துவது நாட்டின் நிதித்துறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். UPI ஆனது நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கவும் செயற்திறனை அதிகரிக்கவும் மற்றும் செலவுகளைக் குறைக்கவும் திறன்களைக் கொண்டுள்ளது. இலங்கையில் UPI தொடர்ந்து வளர்ந்து வருவதால் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் இது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

> ❛ வங்கித் துறை வங்கி பரிவர்த்தனைகளை எளிதாகச் செய்வதற்கு வசதியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒன்றுதான் யு.பி.ஐ (UPI) ஆகும். அதாவது, ஒருங்கிணைந்த பரிவர்த்தனைத் தரவு (Unified Payments Interface). யு.பி.ஐ / UPI இந்த வார்த்தையை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அது என்ன? எப்படிச் செயல்படுகிறது? ❜

UPI ஆனது இலங்கையில் உள்ள வர்த்தகர்களுக்கு பல நன்மைகளை வழங்க முடியும். அவையானவை

- அதிகரித்த வாடிக்கையாளர் வசதி:
- UPI வாடிக்கையாளர்கள் தங்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்தி உடனடியாகவும் பாதுகாப்பாகவும் பணம் செலுத்த அனுமதிக்கிறது.
- வாடிக்கையாளர்கள் இனிப் பணத்தை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை அல்லது பணம் செலுத்த வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை என்பதால் வணிகர்களின் கடைகளில் கொள்வனவு செய்வதற்கு இது மிகவும் வசதியாக இருக்கும்.
- குறைக்கப்பட்ட பரிவர்த்தனைச் செலவுகள்:
- வணிகர்கள் பாயின்ட்-ஆஃப்-சேல் (POS) டெர்மினல்கள் அல்லது பிற கட்டணச் செயலாக்க சாதனங்களில் முதலீடு செய்ய UPI தேவையில்லை.
- இது பரிவர்த்தனைக் கட்டணத்தில் வர்த்தகர்களின் பணத்தைச் சேமிக்க முடியும். இது குறைந்த விலையில் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.
- மேம்படுத்தப்பட்ட பணப்புழக்கம்:
- UPI கட்டணங்கள் உடனடியாகத் தீர்க்கப்படும்.
- இது வர்த்தகர்களின் பணப்புழக்கத்தை மேம்படுத்த உதவும்.
- அதிக மதிப்புள்ள பொருட்களை விற்கும் வர்த்தகர்களுக்கு அல்லது சப்ளையர்களுக்கு வழக்கமான பணம் செலுத்த வேண்டியவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு:
- இரண்டு காரணி அங்கீகாரம் மற்றும் குறியாக்கம் உட்பட வாடிக்கையாளர் தரவைப் பாதுகாக்க UPI பல பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துகிறது.
- இது வர்த்தகர்களை மோசடி மற்றும் பிற நிதி அபாயங்களிலிருந்து பாதுகாக்க உதவும்.
- பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைய வாய்ப்பாக உள்ளது:
- UPI என்பது இந்தியாவில் பிரபலமான கட்டண முறையாகும்.
- மேலும் இலங்கையில் அதை ஏற்றுக்கொள்வது வர்த்தகர்களுக்குப் பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைய உதவும்.
- இந்தியாவில் பிரபலமான தயாரிப்புகள் அல்லது சேவைகளை விற்கும் வர்த்தகர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- அவர்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த உதவுகின்றது:
- இலங்கை அல்லது இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் செலுத்துவதை எளிதாக்குவதன் மூலம் வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்த UPI உதவும்.

**(23ஆம் பக்கம் பார்க்க)**

நேர்கண்டவர் - ஞா.கவினி

**“ ஒரு இலட்சம் குழந்தைகள் , ஆயிரம் அரசு பள்ளிகள், ஐம்பதிற்குமதிகமான சிறப்புப் பள்ளிகள் என்று இன்று ரவி தயாரித்திருக்கும் கற்றல் பலகைகள் பல மாணவச் செல்வங்களின் கரங்களில் தவழ்வதோடு ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருக்கின்றது. ”**



**- ரவிக்குமார் வேலுச்சாமி -**

# கல்கி கற்றல் பலகைகள்

தமிழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பை முடித்துவிட்டு ஆத்ம திருப்தியோடு தனக்குப் பிடித்த தொழில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக பலகைகளிலான கல்கி உற்பத்திகளில் தனக்கென ஒரு தனியிடம் அமைத்திருக்கும் கல்கி கற்றல் பலகைகளின் கர்த்தா ரவிக்குமார் வேலுச்சாமி... இவர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை உதறிவிட்டுச் சொந்த நாட்டிலே மிகக் கச்சிதமாகத் தனது சொந்தத் தொழிலை ஆரம்பித்து ஒரு வருடத்தை வெற்றிகரமாக கடந்திருக்கிறார். இன்று வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டுப் பள்ளிகளென்று குழந்தைகளுக்கு எழுத்துக்களைப் பயிற்றுவிக்கும் கல்வி கற்றல் பலகைகளை உருவாக்கும் ஓர் அரிய முயற்சியில் சாதித்திருக்கிறார்.

ஓர் இலட்சம் குழந்தைகள், ஆயிரம் அரசு பள்ளிகள், ஐம்பதிற்குமதிகமான சிறப்பு பள்ளிகள் என்று இன்று ரவி தயாரித்திருக்கும் கற்றல் பலகைகள் பல மாணவச் செல்வங்களின் கரங்களில் தவழ்வதோடு ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருக்கின்றது.

**திருப்புமுனை**

கல்கியின் பயணத்தில் திருப்பு முனையாக அமைந்தது எங்களது ஒரு தயாரிப்பான கல்கி கற்றல் பலகைகள்.

வெளிநாட்டில் இருந்து வந்து, பல தடைகளுக்குப் பின் என்னுடைய கனவான கல்கியை பிப்ரவரி 2022 ல் தொடங்கினேன். ஒரு சில சறுக்கல்கள் இருந்தாலும் தொழில் நன்றாகச் சென்று கொண்டு இருந்தபோது, பார்வையற்ற மாணவர்களுக்காக பிரெய்லி முறையைப் பயன்படுத்தி அ, ஆ பலகைகள் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அது அவர்களுக்கு பயன்பட வில்லை. ஆரம்பத்தில் அவர்களுக்கு இலவசமாகத் தரலாம் என நினைத்து ஆரம்பத்தது தான் கல்கி கற்றல் பலகைகள்.



கல்கி
கல்வி தச்சன்
பர்னிச்சர்/உள்கட்டமைப்பு/கல்வி

ஆனால், சென்னையில் உள்ள என் தோழிகளான அமுல் மற்றும் சுமதி கோவையில் ஹேமந்த் போன்றோர் என்னைத் தொடர்ந்தும் இந்தக் கற்றல் பல கைகளை செய்வதற்கு ஊக்கமளித்தனர்.

அ ஆ , ABC , abc , 123 மற்றும் ஹிந்தி மொழி என அவர்கள் கேட்பதை செய்து கொடுத்தோம்.

பெற்றோர்கள் அனைவரும்,எங்கள் குழந்தைகள் எழுதுகிறார்கள் ஆனால் தலைகீழாக எழுதுகின்றார்கள் என்று சொல்ல அதற்கும் ஒரு வழியை கண்டு பிடித்து ஆரம்பப் புள்ளிகள் வைத்து செவ் வைப் படுத்தினோம். அந்த பணியை என் தங்கை பிரியா செய்வார்.

## சந்தைப்படுத்தல்

வேதாரண்யத்தில் இருந்து ஆசிரியை கமலவல்லி அம்மா முதன் முதலில் எங் களது பலகைகளை வாங்கிப் பயன்படுத் தியதுடன்அவர் முகநூலில் பதிவிட்டார் தொடர்ந்து , நாமக்கல் லதா அண்ணா



துரை, வேலூர் கல்விச் சிறகுகள் கார்த்தி கேயன், தர்மபுரி மூர்த்தி சார் வாங்கி பயன்படுத்தி முகநூலில் பதிவிட்டதும் வைரஸ் ஆகியது.

ஒரே நாளில் 220 தொலைபேசி அழைப் புகள் வந்தன. 220 பேரும் தமக்கான கல்வி கற்றல் பலகைகளுக்கான தேவை குறித்துச் சொன்னார்கள்.

## சவால்கள்

அப்போது தான் சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. கற்றல் பல கைகளைப் பாரம் கூடுதலான பலகையில் தான் தயாரித்தோம். அது எடை கூடுத லாகவும், தபாலில் அனுப்பவும் செலவும் அதிகமாக இருந்தது. பலகைக்கென பிரத் தியேகமான அளவு மற்றும் , வண்ணங் கள் கொண்ட பலகையைக் கம்பெனியில் கேட்டபோது. இது போன்ற பலகைகள் நிறுத்திப் பல வருடங்கள் ஆகின்றன என பதில் வந்தது.இந்தியா முழுவதும் தேடி மூலப்பொருளைக் கண்டுபிடித்துப் பலகை களைச் செய்து கொடுத்ததோடு தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் சரியாக வடிவமைக்க வேண்டும் என உடன் நண் பனிடம் வைத்த கோரிக்கைக்கு உடனே அவன், உயர்திரு சாலமன் பாப்பையா அவரை சந்திக்க வைத்தான். அந்த நிமி டங்கள் வாழ்வில் மறக்க முடியாதவை.

அவரே , ஒரு சால்வையைப் போர்த்தி, நீ தமிழுக்கு மிகப்பெரிய தொண்டு செய்ய போகிறாய் ஒரு கலைஞனை இன்னொரு கலைஞன் பாராட்ட வில்லை எனில் எனக்கு இழுக்கு எனச் சொன்ன வார்த்தை கள் தான் என் மீதான நம்பிக்கை உணர்வை எனக்குள் ஏற்படுத்தியது.

நீயே கல்கியில் ஓர் அங்கம் என நினைத்துக் கொள்.. வெற்றியுடன் வா.. என ஆசிர்வாதம் வழங்கினார்

அதன் பின்னர், தினமும் கிடைத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பங்களால், பலகை கள் தீர்ந்தன. மீண்டும் புனே, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இருந்து மொத்த மாக ஒரு முதலீட்டில் இறக்குமதி செய்தேன். ஆனால் என்னிடம் பெரிய ஆர்டர் எது வும் இல்லை. நம்பிக்கையை மாத்திரம் பற்றியபடி கற்றல் பலகைகளுக்கான எனது பணிகள் தொடர்ந்த படியே இருந்தன.

தற்போது உயிர் மெய் துணை எழுத் துகள் மற்றும் தமிழ் நெடுங்கணக்குகள் போன்ற பலகைகளை உற்பத்தி செய்து திருச்சி நீதிமன்ற நீதிபதியினூடு வெளி யீடு செய்தோம்.

அனைவரும் எதிர்பார்த்த cursive writing letters ஐ உருவாக்கினோம். அதில் நஷ்டமும் ஏற்பட்டது.

எங்களுடைய வேலைகளுக்கும் கல்கி கற்றல் பலகைகளை உருவாக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டியதாக இருந்தது. இரவும் பகலும் உழைத்தேன்.

பொதியிடுவதில் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க பொதி அளவுகளை மாற்றினோம். பின்னர், எண்ணும் எழுத்தும் பயிற்சி முகாமில் கலந்து கொண்டால் அனைத்து ஆசிரியர்களையும் ஒரே நேரத்தில் காண லாம் என ஒவ்வொரு பருவமும் 3 நாட்கள் தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் பய ணம் ஆனேன். பல அவமானங்களை சந்தித்தேன். வாசலியே கூட நிற்க வைத்து அனுப்பிய சம்பவங்களும் நடந் தது. இந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் தான் இன்னும் தன்னம்பிக்கையோடு பய ணிக்கும் நிறைவைத்தந்தது. நமது கல்கி கற்றல் பலகைகளைப் பயன்படுத்திய அனைவரும் போட்டோ, வீடியோக்கள் அனுப்பினார்கள்.எனினும் நான் நேரடி யாகப் பார்க்க ஆசைப்பட்டு "தினம் ஒரு பள்ளி" எனச் செல்ல ஆரம்பித்தேன். மிகப் பெரிய அனுபவம் அது.

அப்போதுதான் ஒரு விடயத்தைக் கவ னித்தேன். ஒரு சில குழந்தைகள் மட்டும் தனியாக இருந்தார்கள். யார் அவர்கள் என கேட்டபோது சிறப்புக் குழந்தைகள் எனச் சொன்னாங்க. பின், அவர்களை பற்றிய தேடல் ஆரம்பித்தது.

Pre writing boards எனச் சிறப்புக் குழந்தைகளுக்கான கற்றல் பலகைகளை சென்னை மேயர் திருமதி பிரியா அவர்க ளால் வெளியீடு செய்தோம். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்தது தான் கல்கியின் கற்றல் பலகைகள்.

அவர்கெளுக்கென குழந்தைகளின் கை விரல்கள் செல்லும்படி போர்டுகள் தயாரித்தோம்..இன்னமும் அவர்களுக் கென நிறைய மேம்பாட்டுக் கருவிகளை தயாரித்துக் கொண்டு இருக்கின்றோம். இந்தச் சமூகத்தில் சிறப்பு குழந்தைகளுக் கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வரு கிறோம்.

என்னுடைய வேலைகள், குடும்பச் சுமை, பொருளாதாரச் சுமை இருப்பினும் கல்கி கற்றல் பலகைகளின் அரசு பள்ளி, சிறப்புக் குழந்தைகளுக்கான விலையை மட்டும் நாங்கள் மாற்றவே இல்லை.

அதன்பின்னர், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, அரபி மொழிகளில் பலகைகள் செய்தோம்.

வெளிநாட்டுத் தமிழ் குழந்தைகளுக்கு கல்கி கற்றல் பலகைகள் அனுப்பி வைத் தோம்.

எங்களின் பணியைப் பாராட்டி பல தளங்களில் இருக்கின்ற மனிதர்கள் விரு துகளும் அளித்தனர் .அவை அனைத்தும் எங்களை மிக வேகமாக உந்தி செல்ல உதவி வருகின்றன.

என்னுடைய குடும்பம் , அப்பா அம்மா, தங்கை அனைவரும் மிகப்பெரிய சப் போர்ட்டாக இருந்து வருகின்றனர்...!

கல்கியின் பயணமும், கனவும் பெரி யது..செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கின்றது...!

தமிழக அரசு பள்ளி ஆசிரியர்கள், சிறப் புக்கல்வி ஆசிரியர்கள், பள்ளி தாளாளர் கள், பெற்றோர்கள், எங்கள் கடைவிற் பனையாளர்கள் அனைவருக்கும் எங்க ளின் நன்றிகள். என்கிறார் கல்கி நிறு வனத்தின் நிறுவனர் ரவிக்குமார் வேலுச் சாமி.



# ஆடிப்பிறப்பு

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“வனத்தையறுத்து நெருப்பைக்கொளுத்தி மரத்தின் தடிகள் பொறுக்கியே வளைத்து வேலி நிரைத்துக் கட்டியே வளர் நெல் விதைகள் தூவியே

புனத்தில் அடரும் கரிகண்டுடனே புள்ளிமான் பல சாதிக்குப் பிரித்துக் கொடுத்து தனக்கு மிஞ்சிய பொருள் கொண்டேகும் மாந்தரே”

இது வன்னி நாட்டார் பாடலில் வருவது.

“காடு வெட்டிக் கட்டையானது பிடுங்கி” இப்படி வாழ்கின்ற காட்டு வாழ்க்கைபற்றி வரும் இந்தப்பாடல்களிலெல்லாம் தமது வினைத்திறனை பெரிதும் பாராட்டியபடியே இந்தப்பாடல்கள் வரும். இவை வானொலி இல்லாத ஒரு காலத்தில் வேலைத் தலங்களில் வெறும் மனித முயற்சியை மட்டுமே கொண்டு தொழில் செய்த காலங்களில் தமது களைப்பைப் போக்க அவர்கள் பாடிய பாடல்கள். விவசாயிகளின் வாழ்க்கையில் ஆடி மாதம் மிக முக்கியமானது. ஆடி வருவதன் முன் தமது சேனைப்பிலவுகளை சுத்தம் செய்து விதைப்புக்குத் தயாராக்கும் வேலைகளைச் செய்வார்கள்.

ஆயினும் வேலைகள் சோழகக்காற்று ஆரம்பிக்கும்போதே தொடங்கிவிடும்.

புதிதாகக் காடு வெட்டுவோர் வைகாசி முடியும்வரை காத்திருந்து ஆனியில் தொடங்குவார்கள். ஆனியில் வெட்டியகாடு காய்ந்து ஆடியில் பதமான சருகாக நிற்கும். பொதுவாக ஆனியில் பெருமழை வராது. ஆனால் மப்புக் குணமாகவே வானம் இருக்கும். இதை ‘ஆனித்தூக்கம்’ என்பார்கள். மப்பு மந்தாரமாக மேகம் காணப்படும். அதனைத் தொடர்ந்து பெருங்காற்று வீசும் இடையில் மழை வந்தால் அது விவசாயிக்கு பெருத்த நட்டத்தை ஏற்படுத்தும். காரணம் வெட்டிய காட்டில் சருகாக இலைகள் கொப்புகளிலேயே காய்ந்து தொங்கும் கொட்டாது. அவை காட்டுக்குத் தீ வைக்கும்போது

காடு பூரணமாக எரிய உதவும். ஆனால் இடையில் மழை வந்தால் அந்தச் சருகுகள் கொட்டிவிடும். அந்த நிலையில் நெருப்பு வைத்தால் பெரும்பாலும் கொப்புகள் எரியாமல் மீதமாகும். இதனைப் 'படுகாடுபத்துதல்' என்பார்கள். அப்படி படுகாடு பத்திவிட்டால் அவற்றை தனித்தனி கூட்டிக்குவித்து, (இந்தக்குவிப்பை 'கடமளக் கட்டுதல் என்பார்கள்) எரித்தாக வேண்டும். ஆடிக்காத்து ஆரம்பமானதும் வெட்டியகாட்டுக்குத் தீ வைப்பார்கள். அப்போது அது பூரணமா எரியும்.

ஆடியில் தீவைத்தாலும் காட்டை உடனே மழை வந்து பதப்படுத்த வேண்டும். அதனால் இரண்டொரு நாட்களுக்குள் மழை வருமா? என்பதைக் கணித்தே காட்டுக்கு தீ வைப்பார்கள். அப்போதுதான் காட்டில் எரிந்த சாம்பல் காற்றில் எழாமல் நிலத்துக்குள் ஊடுருவிவிடும். மரத்தின் வேர்கள் மண்ணின் கனலோடு நீர் விழ புழுங்கிப் போகும். மீண்டும் தளிர்ப்பதும் குறையும். இப்படி ஆடியில் தயாரான நிலத்தில் புரட்டாசி மாதத்தில்தான் நெல் விதைத்து அதை மண்வெட்டியால் கொத்தி மறைப்பார்கள். நாலரை ஐந்து மாத வயது கொண்ட நெல்வர்க்கங்கள். வன்நெல் என்பார்கள். அவை இப்போது எம்மிடம் இல்லை. அருமையான சுவையான சோற்றைக் கொண்டவை முருங்கைக்காயன், எச் 4, முத்துச்சம்பா என நாம் விதைத்து வெட்டி வருசம் முழுதும் இரசித்துச் சாப்பிட்ட அந்த நெல்மணிகளை நாம் தொலைத்து விட்டோம்.

எங்களுடைய இளவட்டங்கள் சிரிப்பது கேட்கிறது. ஒரு டோசரைக் கொண்டேப் போட்டு நாலாபக்கமும் தள்ளி விட்டா காடு போயிரும் இதுக்கு இவ்வளவு பக்குவமோ? 'எட பொடியா இதுக்குத்தான் சொல்லுறது "சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" எண்டு. காடெரியக்கை எத்தினை விதமான செடியள் தடிகம்புகள் சாம்பலாகி மண்ணில கலக்கிது. அதைவிடப் பல வருசமா மரங்களால கொட்டுப்பட்ட சருகுகளும் அந்த மண்ணிலதான புதைஞ்சு போய்க் கிடக்கு. அதுகள்தான் மண்ணின்ர வளமான சத்து. அதை டோசரைப் போட்டு தள்ளிக் கொண்டே வேலிக்கை விட்டிட்டு ங.. சொல்லு விதைச்ச உழுந்தை சந்தையில் வித்துப்போட்டு பாண் வாங்குறவன்ர கதைபோலதான் உது.

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்று அந்த நாளையில சொல்லுறவை. அதுக்கு அது நெல்லில்ல, சிறுதானியவகையள் அல்லாமலும் பூசணி பாகல் புடோல் போன்ற கொடிகளுக்கான நடுகையை ஆடி அமாவாசையன்று செய்வார்கள். அதற்காக விதைகளைச் சேகரித்து வைப்பது எல்லா வீடுகளிலும் நடக்கும். அப்படி நடப்படும் கொடிகள் அமோகமாகக் காய்ப்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஆடியில எப்ப வேண்டுமானாலும் மழை வரலாம். ஆனால் ஆடி அமாவாசையன்று மழை பெரிதாக பெய்தால்மாரி கருக்கலைந்து போகும் என்பார் என் தந்தை. ஆடி அமாவாசை விரதத்தால் மட்டுமல்ல விதைகளாலும் பெருமை பெறும். ஆடியில் காற்று வளமாகப் பெரிதாக வீசினால் ஐப்பசியில் மழை நிச்சயம். இதை ஒரு சினிமாப்பாடலிலும் சேர்த்துள்ளார்கள்.

கிழக்கே தோன்றும் மின்னலை அவதானித்து மழை எத்தனை நாட்களுக்குள் வரும் என்பதைத் துல்லியமா சொல்வார்கள். தெற்கே ஒரு கோணத்தில் மின்னும் மின்னலுக்கு 'கொழுக்கழத்தி' மின்னல் என்பதே பெயர். காரணம் அந்த மின்னல் மழை துலைச்சுப் போகும் என்பதைக் குறிப்பதாகும். மின்னலிலும் கொடிமின்னல், கெளிச்சல், அடிமின்னல் எனத் தரம் பிரிப்பார்கள். எப்படியோ இந்த ஆடிமாதம் பிறக்கிறபோதே அதைக் கொண்டாடி மகிழ்பவர்கள் நாம்.

முற்காலத்தில் வைக்கோலால் வீடு வேய்பவர்கள், ஆடி, ஆவணி புரட்டாதி மாதங்கள் முடிந்தபின்தான் வீடு வேய்வார்கள். காரணம் இந்த மூன்று மாதங்களில் வீசுகிற காற்று வீட்டின் கூரையையே கலைத்துப் போட்டுவிடும். அந்த இனிமையான அழகான ஆரோக்கியமான வீடுகளை நாம் இனி எப்போது காண்போம். செயற்கையை நம்பிச் சோம்பலை வளர்த்து ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொண்டுள்ளோம்.

ஆடியில் கலப்பைகளுக்கான கொழுவை மாட்ட நாள் பார்ப்பார்கள். எப்பவும் வேலை முடிந்ததும் மரத்தாலான கலப்பையுடன் இரும்பாலான கொழுவைச் சேர்த்து வைப்பதில்லை. அது துருப்பிடித்துக் கலப்பைக் குத்தியை நாசம் பண்ணிவிடும் என்பதால். கலப்பைக்கு கொழு மாட்டச் சகுனம் பார்த்து காத்திருப்பார்கள். அதன் நிமித்தம் வானில் தோன்றும் மின்னல்தான். உங்களுக்கு தெரியுமா இந்த நிமித்தம் பார்ப்பவர்கள் கிராமங்களில் ஒரு சிலர் இருப்பார்கள்.

கிழக்கே தோன்றும் மின்னலை அவதானித்து மழை எத்தனை நாட்களுக்குள் வரும் என்பதை துல்லியமா சொல்வார்கள். தெற்கே ஒரு கோணத்தில் மின்னும் மின்னலுக்கு 'கொழுக்கழத்தி' மின்னல் என்பதே பெயர். காரணம் அந்த மின்னல் மழை துலைச்சுப் போகும் என்பதை குறிப்பதாகும். மின்னலிலும் கொடிமின்னல், கெளிச்சல், அடிமின்னல் எனத் தரம் பிரிப்பார்கள். எப்படியோ இந்த ஆடிமாதம் பிறக்கிறபோதே அதைக் கொண்டாடி மகிழ்பவர்கள் நாம்.

யாழ்ப்பாணத்தில் ஒன்று குத்தியாக சில பனைகள் பழுத்து பழம் விழும். அதை அவசரமாக எடுத்து கிழங்குப்பாத்தி போடுவார்கள். இந்த ஆடியில் போடப்படும் கிழங்குப்பாத்தி மிகப்பிரபலம். காரணம் கார்த்திகைத் தீபத்தன்று பிதிர்களுக்கு படையல் போடும் வழக்கம் உண்டு. அந்தப் படையலில் இந்த ஆடியில் போட்ட பனங்கிழங்கை முன்னரே பிடுங்கி காயவிட்டு மாவாக்கி ஒடியலில் பிட்டுச் செய்து வைத்துப் படைப்பார்கள்.

ஆறேழு மாதங்களுக்கு நிற்கக்கூடிய மரக்கறிப் பயிர்களை ஆடியில் நடும்போது அவை மாரியில் தாக்குப்பிடிக்கக் கூடிய இடங்களா என்பதைக் கவனித்தாக வேண்டும். இப்போது வீட்டுத் தோட்டப் பயிர்களை பைகளில் வைத்து வளர்க்கும் வழக்கம் வந்திருக்கிறது. தேவைக்கேற்பப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தவும் முடிகிறது. வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்ய முடிகிறது. இதனால் வீட்டுச் செலவு என்பது குறைந்துள்ளது.

கால நிலைகூட நாம் முன்னர் குறித்தது போல இப்போது இல்லை. என்வயதொத்தவர்கள் கூடிக் கதைக்கும்போது ஆச்சரியப்படுவோம். காண்டாவன காலத்தில் பெருமழை வருகிறது. கார்த்திகை மாதத்தில் கொடும் வெய்யில் தகிக்கிறது என்ன காலம் என்று எப்படிப்பார்த்தாலும் இன்னும் கூட நாம் விளையும் உணவுகளைத்தான் உண்கிறோம். காலம் மாறிவிட்டது என்பதற்காக உணவுப் பொருள் எதையும் விளைவிக்காமல் உண்ண முடியாதல்லவா?



# குறுகிய காலத்தில் அதிகளவுக்கு இலாபம் தரும் கௌப்பிச் செய்கை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



தானிய பயிர்களிலே மிகக் குறுகிய நாட்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பயிர் என்றால் அது கௌபி மட்டுமே.

கௌப்பி இரகங்களில் பல இரகங்கள் உள்ளது இருப்பினும் அதிக விளைச்சலை தரக்கூடிய சிவப்பு நாட்டு இரகங்களை தேர்ந்தெடுத்து நடுகை செய்ய வேண்டும்.

மணல் மண், களிமண் தவிர்ந்த அனைத்து வகை மண்ணிலும் வளரக் கூடியது. குறிப்பாக மேட்டு நிலங்களில் நன்றாக வளரும்

தாழ்வான பகுதிகளில் நடுவதாக இருந்தால் கோடை காலங்களிலே நட வேண்டும்.

கௌப்பியானது குறைந்த நீர் கட்ட மைப்பை எடுத்துக் கொள்ளும் பயிராகும் கௌப்பியை பொறுத்தவரை அக்டோபர் தொடக்கம் ஜனவரி தவிர்ந்த ஏனைய மாதங்களில் சுழற்சி முறையில் நடுகை செய்யலாம்.

ஒரு தடவை உழவு செய்தால் போதும்.

உழவின் போது தொழு உரம் இட வேண்டிய அவசியம் இல்லை.

விதைப்பு முறையில் நடுவதை விட நடுகை முறையில் நடுவது சிறந்ததாக இருக்கும். ஓர் ஏக்கரில் கௌப்பி நடுவதாக இருந்தால் 4 கிலோ விதைகள் தேவைப் படும். விதைப்பு முறையில் நடுவதாக இருந்தால் 9 கிலோ விதைகள் வரை தேவைப்படும்.

விதைப்பு முறைகளைத் தவிர்த்து நடுகை முறையில் பயிர்செய்தால் விளைச்சல் அதிகமாக இருக்கும். அதாவது விதைப்பு முறை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்களை விட நடுகை முறை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கள் சற்றுப் பெரிதாக இருக்கும்.

அதோடு களைகளை அகற்றுவதற்கும் மண் அணைப்பதற்கும் வசதியாக இருக் கும்.

நடுகை முறையில் 20 cm × 60 cm இடைவெளியில் இரண்டு விதைகள் வீதம் நடுவது சிறந்ததாக இருக்கும்.

அத்தோடு அதிக விதையும் தேவைப்ப டாது விளைச்சலும் அதிகமாக இருக்கும்.

கௌப்பி விதைப்பதற்கு முன்பு ஜீவா மிர்தம் அல்லது பஞ்சகாவியாவில் இரண்டு மணிநேரம் விதை நேர்த்தி செய்து நட



வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் வேர் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் இருக்கும்.

அத்தோடு முளைப்புத்திறன் அதிகமாக இருக்கும்.

கௌப்பியைப் பொறுத்தவரை அதிக அளவில் நீர் தேவைப்படாது. பனித் தண்ணீரில் வளரக்கூடியதாக இருக்கும். பனியோ, மழையோ இல்லாதபட்சத்தில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு தடவை நீர் தேங்கி நிற்காதவாறு போதுமான அளவில் நீர் பாய்ச்சினால் போதும்.

கௌப்பி நாட்டியதிலிருந்து 7வது நாளில் ஜீவாமிர்தம் தெளிக்க வேண்டும். பின்பு 14வது நாளில் களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

பின்பு 15வது நாள் மீண்டும் ஜீவாமிர்தம் தெளிக்க வேண்டும்.

இடையில் பூச்சிகளின் தாக்கம் இருப்பதாக அறிந்தால் கற்பூரக் கரைசல் அல்லது அக்னி அஸ்திரா அல்லது மூலிகை கரைசல் போன்ற இயற்கை கிருமி நாசினிகளை பயன்படுத்தலாம்.

அதன்பின் 21ஆவது நாளில் பூக்க ஆரம்பிக்கும்.

பூக்க ஆரம்பித்த ஓரிரு நாளில் தேமோர் கரைசலை பயன்படுத்த வேண்டும் இவ்வாறு செய்வதனால் பூ உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிகளவில் திரட்சியாகக் காய்க்க ஆரம்பிக்கும்.

தேமோர் கரைசல் பயன்படுத்துவதாக இருந்தால் குறிப்பாக மாலை வேளையில் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் ஒரு பாத்தியில் உள்ள இரண்டு செடியிலும் குறைந்தது 20 காய்கள் வரை இருக்கும் அத்தோடு ஒவ்வொரு காயிலும் குறைந்தது 12 விதைகள் வரை இருக்கும்.

கௌப்பி பூக்க ஆரம்பித்த நாளிலிருந்து செடிகளின் நீர்த் தேவையினை அறிந்து நீர் பாய்ச்சி வர வேண்டும்.

30 ஆவது நாளிலிருந்து காய்கள் பிடிக்க ஆரம்பிக்கும்.

பின்பு 45ஆவது நாளிலிருந்து காய்கள் பறிக்க ஆரம்பிக்கலாம்.

60 - 65ஆவது நாளில் காய்களை முற்றாகப் பறித்து விடலாம்.

ஓர் ஏக்கரில் 300 - 400 கிலோ வரை காய்ந்த கௌப்பி உற்பத்தி செய்யக் கூடிய



வாறு இருக்கும்.

ஏக்கருக்கு 500 கிலோ கௌப்பி விளைச்சல் பெற்ற விவசாயிகளும் உள்ளார்கள்.

கௌப்பியைப் பொறுத்தவரை சந்தை வாய்ப்பினை பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

விலையும் அதிகமாக இருக்கும்

> கௌப்பி விதைப்பதற்கு முன்பு ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகாவியாவில் இரண்டு மணிநேரம் விதையை நேர்த்தி செய்து நட வேண்டும். இவ்வாறு செய்வதனால் வேர் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் இருக்கும். அத்தோடு முளைப்புத் திறன் அதிகமாக இருக்கும். கௌப்பியை பொறுத்தவரை அதிக அளவில் நீர் தேவைப்படாது. பனித் தண்ணீரில் வளரக் கூடியதாக இருக்கும். பனியோ, மழையோ இல்லாதபட்சத்தில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு தடவை நீர் தேங்கி நிற்காதவாறு போதுமான அளவில் நீர் பாய்ச்சினால் போதும்.

அத்தோடு அதன் அடர்த்தி அதாவது அதன் நிறை யும் அதிகமாக இருக்கும்.

செலவில்லாமல் குறைந்த பராமரிப்பில். இரண்டு மாதத்தில் வருமானத்தினைப் பெற்றுத் தரக்கூடிய பயிர்களில் கௌப்பியும் ஒன்று என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அதோடு கௌப்பியானது மண்ணின் மலட்டுத் தன்மையை முற்றாக நீக்கி விடும் தன்மை கொண்டது.

கௌப்பி நாட்டிய மண்ணில் எந்தப் பயிரை நட்டாலும் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி - 0770239784
வாட்ஸ்அப் - 0769196445



- அ. ராஜன் -

# அரிசி ஏற்றுமதிக்கு இந்தியத் தடையும் சர்வதேச அரங்கில் அதன் தாக்கமும்

பல நாடுகளில் மண், மலை உள்ளிட்ட இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. இதுதவிரத் தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் வெளியேற்றும் கரியமில வாயு, புவி வெப்பநிலை உயர்வுக்கு வழிவகுக்கிறது. இதனால் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் பாதிப்பை உலகம் இன்று உணரத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக, பசிபிக் பெருங்கடலில் உருவாகியுள்ள எல்நினோ ஒழுங்கற்ற காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஒருபுறம் வறட்சி, மறுபுறம் வெள்ள பாதிப்பு எனக் காலநிலையில் நேரெதிர் மாற்றங்கள் உருவாகின்றன.

இந்த ஆண்டு தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களில் பருவமழை தாமதமாகத் தொடங்கி உள்ளது. அத்துடன் போதுமான அளவு மழை பெய்யவில்லை. இதனால் நெல்சாகுபடி குறைந்துள்ளது. ஆனால்வடமாநிலங்களில் வர லாறு காணாத வகையில் கனமழை பெய்து வருகிறது. இதனால்விளைநிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. ஒரு பக்கம் வறட்சி மற்றொரு பக்கம் வெள்ளம் நிலவுவதால் நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்தி குறையலாம்.

இதனிடையே, கடந்த சில மாதங்களாகவே இந்தியாவில் அரிசி விலை கணிசமாக அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில் நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்தி குறைந்தால் அதன் விலை மேலும் உயரும் அபாயம் உள்ளது. எனவேதான், உள்நாட்டில் அரிசி விலை உயர்வைக் கட்டுக்குள் வைப்பதற்காகப் பாஸ்மதி அல்லாத அரிசியின் ஏற்றுமதிக்கு இந்திய மத்திய அரசு கடந்த 20ஆம் திகதி தடை விதித்தது.

உலக நாடுகள் உணவுப் பொருட்களின் தேவைக்கு ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன. ஒரு நாட்டின் வேளாண் விளைபொருள் ஏற்றுமதி தடைபட்டால் பல நாடுகள்பாதிப்புக்குள்ளாவது இன்று கண்கூடாகத் தெரிகிறது. அந்த வகையில், உலகம் முழுவதும் உள்ள 800 கோடி மக்கள் தொகையில் 300 கோடி பேரின் பிரதான உணவாக அரிசி விளங்குகிறது. அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்க நாடுகள் அரிசி இறக்குமதியை நம்பியே உள்ளன.





உலக அளவில் அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதம் ஆகும். கடந்த ஆண்டில் சர்வதேச அளவில் 5.54 கோடி டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பங்கு மட்டும் 2.22 கோடி தொன் ஆகும். இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதியில் பாஸ்மதி அல்லாத அரிசி 25% என்ற அளவில் பெரும் பங்கு வகிக்கிறது.

ஏற்கெனவே ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாகச் சர்வதேச அளவில் கோதுமை விலை அதிகரித்துள்ளது. தற்போது, இந்திய அரசு அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்திருக்கும் நிலையில், உலகளவில் உணவுப் பாதுகாப்பின்மை தீவிரமடையும் சூழல் உருவாகியுள்ளது.

**அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் பாதிப்பு**

இந்தியாவின் தடையால் அமெரிக்கா, ஆஸ்திரேலிய நாடுகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. அமெரிக்காவின் பல மாகாணங்களில் அரிசி இருப்புத் தீர்ந்துவிட்டது. பல சூப்பர் மார்க்கெட்களில் அரிசி வாங்க மக்களின் கூட்டம் அலைமோதியது. கொரோனாக் காலகட்டத்தை நமக்கு நினைவூட்டுவதாக அமைந்தது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

விலையும் இரண்டு மடங்கு அதாவது 10கிலோ அரிசியின் விலை இந்திய ரூபாவில் 1640-லிருந்து (20 டாலர்) ரூ.3,200 வரை (40 டாலர்) அதிகரித்துள்ளது. இது தங்களது உணவு பட்ஜெட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அமெரிக்கர்கள் புலம்பும் சூழல் உருவாகி இருக்கிறது. ஒரு மாதத்துக்குத் தேவையான அரிசி மட்டுமே கையிருப்பாக இருப்பதால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் அமெரிக்கர்கள் திணறுகின்றனர்.

இதேபோன்ற நிலைதான் ஆஸ்திரேலியாவிலும். வெள்ளை அரிசிக்கு மாற்றாக பாஸ்மதி இருந்தாலும், அதனை வாங்குவதில் அங்குள்ள மக்களுக்கு அதிக ஆர்வமில்லை. மக்கள் தேவைக்கு அதிகமாக அரிசியை வாங்கி இருப்பு வைப்பதால், அமெரிக்காவைப் போல் ஆஸ்திரேலியாவிலும் விலை மேலும் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் தடையால் துருக்கி, சிரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தீவிரமாக பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இந்நாடுகளில் உணவுப் பணவீக்கம் அதிகமாக இருக்கும் சூழலில், இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் தடை உத்தரவு பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தடையை விலக்க ஐஎம்எஃப் கோரிக்கை**

அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடை உலகளவில் உணவுப் பொருட்களின் விலையை மேலும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது என்கிறது சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்). ரஷ்யா-உக்ரைன் போர் தீவிரமடைந்துள்ளதால் கருங்கடல் பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் உக்ரைன் உள்ளது. இதன் எதிரொலியாக, கோதுமை, எண்ணெய் வித்துகளின் விலை உலகளவில் ஏற்றம் கண்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் தடை நடவடிக்கை தானியங்களின் விலையை மேலும் 15 சதவீதம் வரை அதிகரிக்கும் என்கிறார் சர்வதேச செலாவணி நிதியத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் பியர் -ஒலிவியா குஹாஷன். எனவே, உடனடியாக அரிசிக்கான தடையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தியாவிடம் ஐஎம்எஃப் வலியுறுத்தியுள்ளது.




**“அதிக மழை, அதிக வெப்பம், பொய்க்கும் மழை, வெள்ளப் பெருக்கு போன்ற அதிதீவிர கால மாறுபாடுகள் ஒரு நாட்டின் உணவு உற்பத்தியை பாதிக்கும்போது அது மற்றொரு நாட்டில் எந்தவித தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை தற்போதைய உலகம் உணரத் தொடங்கியுள்ளது. இதில், உலக அரசியல் நிலைவரங்களும் மோசமானால் நிலைமை இன்னும் விபரீதமாகும் என்பதை ரஷ்யா- உக்ரைன் போர் நமக்கு உணர்த்தி உள்ளது.”**

அரிசி ஏற்றுமதிக்கு தடை என்பதை பணக்கார நாடுகள் ஓரளவு சமாளித்துவிடும். ஆனால், உள்நாட்டுக் கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஏழ்மையான சோமாலியா, சூடான், கென்யா, லெபனான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களின் நிலைதான் பரிதாபம். இந்தியா போன்ற வேளாண் தலைமைத்துவமிக்க நாடுகள் இதனை உணர்ந்து உலக நாடுகளிடையேயான உணவு சங்கிலித் தொடர் துண்டிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அதிக மழை, அதிக வெப்பம், பொய்க்கும் மழை, வெள்ளப் பெருக்கு போன்ற அதிதீவிர கால மாறுபாடுகள் ஒரு நாட்டின் உணவு உற்பத்தியைப் பாதிக்கும்போது அது மற்றொரு நாட்டில் எந்தவிதத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை தற்போதைய உலகம் உணரத் தொடங்கியுள்ளது. இதில், உலக அரசியல்நிலைவரங்களும் மோசமானால் நிலைமை இன்னும் விபரீத மாகும் என்பதை ரஷ்யா- உக்ரைன் போர் நமக்கு உணர்த்தி உள்ளது.

# இஸ்ரேலின் பாலுற்பத்தித்துறை கூறும் செய்தி





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

உங்களுக்கு இஸ்ரேல் என்ற நாட்டைப் பற்றி எந்தளவுக்குத் தெரியும்? நித்தமும் யுத்தம் நடக்கும் இரத்த பூமி. யூதர்களின் நாடு. பலஸ்தீனர்களை வஞ்சித்த மண். பலம் மிக்க இராணுவத்தைக் கொண்ட நாடு. இப்படியே யுத்தம், இரத்தம் என நித்தமும் அலைக்கழிவுகளை மாத்திரமே சந்தித்து வரும் நாட்டைப்பற்றி வேறு என்ன தெரிய வேண்டும் என உங்களுக்கு ஐயம் எழலாம்.

உலகின் நவீனகரமான விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு முறைகளைச் சிறப்பாகப் பயன்படுத்தும் ஒரு நாடு என்பதை நீங்கள் அறிவீர்களா?

கால்நடை வளர்ப்பில் குறிப்பாகக் கறவை மாடு வளர்ப்பில் இஸ்ரேலியர்கள் அடைந்திருக்கும் முன்னேற்றம் சிறப்பானது. இஸ்ரேலிய பிரீசியன் மாடு வருடமொன்றுக்கு 12000-15000 லீட்டர் வரை கறக்கிறது. (அமெரிக்க பசு 10000 வரையிலும் அவுஸ்ரேலிய பசு 5500 வரையிலும் இலங்கைப் பசு 600- 700 லீட்டர் வரையிலும் பாலைக் கறக்கிறது). இந்த அடைவு மிக இலகுவாக ஓரிரு நாட்களில் நிகழ்ந்த சம்பவமன்று. தனது நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கை பாலைவனமாக குறிப்பாகப் பயிர்ச் செய்கை மற்றும் புற் செய்கைக்கு உகந்த தல்லாத வறண்ட நிலத்தையும் தண்ணீர் பற்றாக்குறையையும் கொண்ட இஸ்ரேல் எப்படி இந்த அடைவை அடைந்தது எனக் கேள்வி எழலாம்.



இஸ்ரேல் பகுதியில் ஒரு லீட்டர் வரையான பாலைத் தரக்கூடிய டமாஸ்கஸ் பசுவை நெதர்லாந்தில் இருந்து இறக்குமதியான பிரிசியன் மாடுகளுடன் கலந்து இஸ்ரேலிய பிரிசியன் கலப்பினம் உருவாகியது. டமாஸ்கஸ் பசுவின் நோய், வறட்சி தாங்கும் திறனும் பிரிசியனின் பால் உற்பத்தியும் சேர்ந்த இனமாக இஸ்ரேலின் பிரிசியன் கலப்பினம் உருவாகியது.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து, யூதர்களின் நாடாக இஸ்ரேல் உருவாகும் போது கிடைத்த நிதியில் கணிசமான பிரிசியன் மாடுகளை அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து உருவாகிய கலப்பின மாடுகளுடன் மீளக் கலப்புச் செய்யப்பட்டு மேலும் வினைத்திறனான இனங்கள் உருவாக்கப்பட்டன. இன்று வரை இந்த விடயத்தில் பல ஆய்வுகள் செய்யப்பட்டுப் பொருத்தமான பசுக்கள் உருவாகியுள்ளன. அவைதான் இந்த 12000-15000 லீற்றர் கறக்கும் பசுக்கள்.

இன்று இஸ்ரேலில் 800 வரையான பால்ப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் 125000 வரையான பசுக்களே உள்ளன (மொத்த வவுனியா மாவட்ட மாடுகளுக்கு சமன்). பெரும்பாலும் பசு மாடுகள். காளைகள் கிடையாது.sion எனும் தனியார் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிறுவனம் மாடுகளைக் கருவூட்டுகிறது. கால்நடை வைத்திய சேவை கூடத் தனியார- அரச- கூட்டுறவு சேவையாகும். பாலுற்பத்தி கூட ஒரு வித கோட்டா முறையிலேயே நடைபெறுகிறது. இந்தக் கோட்டாக்கள் வருடத்துக்குத் தீர்மானிக்கப்பட்டு மாதத்துக்குக் கணக்கிடப்படுகிறது. கோட்டாக்களுக்கு அமையவே பாலை உற்பத்தி செய்ய வேண்டும். கூடவும் முடியாது. குறையவும் முடியாது. பாலின் விலையும் உற்பத்திச் செலவுக்கு அமைய அடிக்கடி தீர்மானிக்கப்படும்.

இங்குள்ள பசுக்கள் தரமான காளைகளின் விந்தணுக்கள் மூலம் சினைப்படுத்தப்படுகின்றன. அதாவது, பாலுற்பத்தி, பாலின் தரம், நோய் எதிர்ப்புச் சக்தி என பல இயல்புகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் காளைகளில் இருந்து விந்தணுக்கள் பெறப்பட்டுப் பாவிக்கப்படுகின்றன.

சந்ததிகள் முறையாக அவதானிக்கப்பட்டு இயல்புகள் தரம் குறைவடைந்தால் அதற்குப் பொருத்தமான காளைகள் மாற்றியமைக்கப்படும். இந்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியான ஆய்வுகள் இடம்பெறுகின்றன. இப்படியான இஸ்ரேலின் பாலுற்பத்தியின் இன்னும் பல சிறப்பான விடயங்களை அடுத்து வரும் வாரங்களிலும் தொடர்வோம்.



# ஏ.ஐ. யாருக்கு வில்லன்?



- எ.கார்த்திக் -

**"மனிதர்களுக்குச் சவால் கொடுக்கும் வகையிலான செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட இந்தப் பாட்கள் வரமாகவும், சாபமாகவும் பார்க்கப்படுகின்றன. நாள் கணக்கில் மேற்கொள்ளும் வேலைகளை கன நேரத்தில் செய்துவிடுகிறது. அதே நேரத்தில் மனிதர்களுக்கு மாற்றாகச் சில துறை சார்ந்த பணிகளுக்கு ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப் படலாம் என்ற அச் சுறுத்தலும் எழுந்துள்ளது."**

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் அனைவரது கவனத்தையும் பெற்றுள்ளது செயற்கை நுண்ணறிவு (ஏஐ). மனிதனுக்கு இருக்கும் நுண்ணறிவுத் திறனை இயந்திரங்களுக்குக் கொண்டு வரும் ஸ்மார்ட் முயற்சியாக 20-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஏஐ சார்ந்த ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. படிப்படியான பரிணாம வளர்ச்சியை எட்டி இன்று மனிதர்களுக்குச் சவால் கொடுக்கும் அளவுக்கு அசுர வளர்ச்சி அடைந்துள்ளது ஏஐ.

கணினியின் தந்தை எனப் போற்றப்படும் சார்லஸ் பாபேஜ், உலகின் முதல் கணினி நிரலாளர் ஏடா லவ்லேஸ் (Ada Lovelace) போன்ற அறிஞர்கள் கூட இயந்திரங்கள் செயற்கை நுண்ணறிவுத் திறனைப் பிற்காலத்தில் பெறும் என எண்ணியிருக்க மாட்டார்கள். ஏஐ சார்ந்த ஆராய்ச்சிகள் தொடங்கி 100 ஆண்டுகள் கூட முழுமையாக எட்டாத நிலையில் மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பாய்ச்சல் அதிவேகமாக உள்ளது. ஏஐ சார்ந்த ஆராய்ச்சியின் தொடக்கப் புள்ளிகளில் ஒருவராக அறியப்படுகிறார் மார்வின் மின்ஸ்கி.

தமிழில் அறிவியல் - தொழில்நுட்பம் சார்ந்து புதினம் எழுதி வந்த எழுத்தாளர் சுஜாதாவின் 'என் இனிய இயந்திரா'-வில் வரும் ஜீனோ ரோபோவுக்குத் தெரிந்தது கூட நமக்குத் தெரியாது எனச் சொல்லி இருப்பார். அதில் முகத்தைப் பார்த்து மனதில் நினைப்பதை யூகத்தின் அடிப்படையில் சொன்னதாக ஜீனோ ஓர் இடத்தில் சொல்லும். தமிழில் ஏஐ குறித்த அறிமுகம் அந்த வழியில் தான் அரங்கேறி உள்ளது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

தொழில்நுட்ப உலகில் சர்வமும் ஏஐ மயமாக மாறி சில ஆண்டுகளாகின்றன. செயற்கை நுண்ணறிவு குறித்த பேச்சுகள் 21-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து பரவலாக பேசப்பட்டு வருகிறது. சுகாதாரத் துறைக்கு உறுதுணைபுரிய, போர் புரிய, இசை அமைக்க, புத்தகம் எழுத, பயோ - டேட்டாவைச் சரிபார்க்க எனப் பல்வேறு பணிகளுக்கு ஏஐ உதவி வருகிறது. டூத் பிரஷ்ஷில் கூட ஏஐ இடம் பெற்றிருப்பதாக சொல்லி பிராண்ட் செய்தது ஒரு நிறுவனம். இதெல்லாம் மெஷின் லேர்னிங்கால் மட்டுமே சாத்தியம் ஆகின்றன.

ஏஐ சார்ந்த ஆராய்ச்சிகள் 1956-ல் தொடங்கியது. உயிரினங்கள் கொண்டிருக்கும் நுண்ணறிவுத் திறனை அஃறிணையான இயந்திரங்களுக்குக் கொடுக்கும் முயற்சியாக முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி அது. பல்வேறு ஃபீல்ட்களை உள்ளடக்கி இந்த ஆராய்ச்சி அமைந்தது. இன்று ஃபேஷியல் ரெகக்னேஷன் தொடங்கி பயனர்களை டார்கெட் செய்து தேடுபொறிகளில் வரும் விளம்பரங்கள், பரிந்துரைகள், வெர்ச்சுவல் அஸிஸ்டன்ட்ஸ், தானியங்கு வாகனங்கள் என அனைத்தும் ஏஐ நுட்பத்தால் சாத்தியமாகி உள்ளது. அதே போல குறிப்பிட்ட சில துறைகளில் தனித்துவ பயன்பாட்டுக்காகவும் ஏஐ பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் மனிதர்களுடன் மல்லுக்கட்டும் கேம் பிளேயிங்கிலும் ஏஐ மாஸ் காட்டி வருகிறது.

இந்தச்சூழலில் கடந்த ஆண்டு ஜெனரேட்டிவ் ஏஐ குறித்து உலகளவில் பரவலாக பேச்சு எழுந்தது. ஓபன் ஏஐ நிறுவனத்தின் சாட்பாட் என அறியப்படும் சாட் ஜிபிடி அதற்கான விதையைப் போட்டது. தொடர்ச்சியாக பல்வேறு நிறுவனங்கள் ஜெனரேட்டிவ் ஏஐ சார்ந்து கவனம் செலுத்தித் தங்களது சாட்பாட்களை அறிமுகம் செய்தன. கூகுளும் தன் பங்குக்கு இந்தக் கோதயவில் குதித்தது. கதை, கவிதை, கட்டுரை, கம்ப்யூட்டர் புரோகிராம் கோடிங், இன்னும் பல.. என அனைத்தையும் ஜெனரேட்டிவ் ஏஐ சாட்பாட்கள் வழங்கும்.

அதேபோல எழுத்து வடிவிலான டிஜிட்டல் சாதன பயனர்களின் கற்பனையைப் படங்களாக மாற்றும் வல்லமையையும் ஜெனரேட்டிவ் ஏஐ பாட்கள் கொண்டுள்ளன. மிட்ஜெர்னி, டால்-இ போன்றவை அதற்கு உதாரணம்.

மனிதர்களுக்குச் சவால் கொடுக்கும் வகையிலான செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட இந்தப் பாட்கள் வரமாகவும், சாபமாகவும் பார்க்கப்படுகின்றன. நாட்கணக்கில் மேற்கொள்ளும் வேலைகளைக் கன நேரத்தில் செய்துவிடுகின்றன. அதே நேரத்தில் மனிதர்களுக்கு மாற்றாக சில துறை சார்ந்த பணிகளுக்கு ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சுறுத்தலும் எழுந்துள்ளது.

குறிப்பாகப் படைப்பு சார்ந்து இயங்கி வருபவர்களுக்கு வில்லனாக விஸ்வரூபம் எடுக்கும் வல்லமை ஏஐ-க்கு இருப்பதாக பார்க்கப்படுகிறது. அதனால்தான் ஹாலிவுட் சினிமாவில் ரைட்டர்ஸ் கில்ட் ஆஃப் அமெரிக்கா என்ற அமைப்பு ஏஐ தொடர்பான அச்சுறுத்தலை சுட்டிக்காட்டி போராட்டத்தில் இறங்கினர். மறுபக்கம் எந்திரன் படத்தில் வரும் சிட்டி ரோபோ போல மருத்துவ துறை சார்ந்த நுண்ணறிவு திறன் கொண்ட ரோபோக்கள் வரும் நாட்களில் பெரிய அளவில் சிகிச்சை மேற்கொள்ளலாம்.




# நாம் தவறு இழைக்கவில்லை ஆனால் தோற்று விட்டோம்!



வேதநாயகம் தபேந்திரன்

"நாம் தவறு இழைக்கவில்லை. ஆனால் தோற்றுவிட்டோம்."

இந்த வசனம் பிரபலமானது. கைத் தொலைபேசி உற்பத்தியில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த நொக்கியா கம்பனியை மைக்றோசொவ்ற் நிறுவனத்துக்கு விற்ற போது நொக்கியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி கூறிய வசனமே இது.

ஆம், இன்றைய உலகில் மாறும் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப எம்மை நாம் இற்றைப்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் காணாமல் போய் விடுவோம். நொக்கியா நிறுவனமும் சாதாரண கைத்தொலைபேசித் தயாரிப்பில் திறமையால் பிரபலமாகி இருந்தது. ஆனால் மாறும் தொழில்நுட்ப உலகைப் புரிந்து கொண்டு ஸ்மார்ட் தொலைபேசி யுகம் நகரவில்லை. வளரவில்லை.

அதனால்தான் அவர்கள் தவறு இழைக்கவில்லை. ஆனால் தோற்றுவிட்டார்கள்.

தொழில்நுட்ப உலகம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கும். அதன் மாற்றத்தைச் சரியாக உள்வாங்கிக் கொண்டால் தான் வெற்றிகரமான ஒரு முயற்சியாளராக இருக்க முடியும்.

தொழிநுட்பம் சார்ந்த உற்பத்திகளில் அதிக தொகையை முதலீடு செய்தோமாயின் அதிலும் நாம் தோற்றுப்போய்விடுவோம்.

இன்று ஒரு தொழில்நுட்ப உபகரணம் அதிகமாக விலைப்படுகின்றதென அதில் பெரும்தொகையை வாங்கி வைத்தால் நிச்சயமாகத் தோற்றுப்போய் விடுவோம்.

ஏனெனில் அதனை விட மலிவாக அதே வேளையில் திறன் கூடியதாகவும் கவர்ச்சியாகவும் இன்னுமொரு உற்பத்தி சந்தைக்கு வந்து விடும்.

இதனால் நாம் அதிகம் விலைப்படுகிறதே என அதிகம் வாங்கி வைக்க முடியாது. அதிகமாக வாங்கி வைத்தால் அதிகமாக நட்டப்பட்டுத் தொழில் துறையிலிருந்து முற்றாக விலகவேண்டிவரும்.

கடன்பட்டிருந்தால் கடன் உங்களைத் துரத்தும். வாழ்வின் நிம்மதியையும் குலைத்துவிடும்.

உணவுப் பொருள், ஹாட்வெயார் பொருள், உடுதுணிக் கடை போலத் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திப் பொருள் விற்பனைக் கடைகள், சேவை நிலையங்கள் இருப்பதில்லை. அதிக கையிருப்பு வைத்துக் கொள்ளாமல் சிறியதொரு கையிருப்புடன் தான் வியாபாரத்தில் முன் நகர வேண்டும்.

இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ளாமல் தொழில்நுட்பம் சார்ந்த வியாபாரத்தில் ஈடுபட்ட பலர் படு நட்டங்களை அடைந்துள்ளனர்.

அடுத்தது வியாபாரம் செய்து பார்ப்போம் என ஒரு சிலர் வியாபாரத்தினுள் வருகின்றனர். வியாபாரம் செய்து பார்க்கும் துறை ஒன்றல்ல. வியாபாரக்குணம் என்பது பிறப்பிலேயே எம்முடன் உணர்வாகத் திறனாக வர வேண்டியது.

வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்த, பறக்கும் நபர்களது வாழ்க்கை வட்டத்தை அவர்களது சிறுவயது முதலே ஆராய்ந்து பாருங்கள். உணர்வீர்கள். எந்த ஒரு துறையிலும் பிரகாசித்து வெற்றி பெறுவோர் அந்தத் திறனுடன் பிறந்து பின்னர் அந்தத் திறனை வளர்த்துக் கொண்டவர்களாகத் தான் இருப்பார்கள்.

வியாபாரம் என்று இறங்கி விட்டால் அதற்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும். கலியாண வீடு, செத்த வீடு, கோயில், கொண்டாட்டம், வருத்தம், துன்பம் என எல்லாவற்றுக்கும் ஓடினால் உங்கள் கதி அதோ கதி தான்.

மொத்தமும் நட்டம் தான். உள்ளதையும் இழந்து ஒட்டாண்டி ஆக வேண்டியது தான்.

இற்றைக் காலத்தில் நிறையவே தோல்வியடைந்த தொழில் முயற்சியாளர்களை நாம் காண்பது இதனால் தான்.

தொழில் அதிபர் ஒருவருடன் நின்று தொழில்பழகி முன்னுக்கு வாருங்கள். பணத்தை முதலிட்ட பின்பாகத் தொழில் பழகப் போகாதீர்கள். ஏனென்றால் பணம் என்பது உங்கள் வாழ்க்கை, நிம்மதி எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒன்று.

இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்ற உண்மையை உணர்ந்து வாழ்க்கைப் பாதையை வடிவமைத்துக் கொள்ளுங்கள்.




(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

• இது வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை வளர்த்துப் புதிய சந்தைகளை அடைய உதவும்.

ஒட்டுமொத்தமாக, இலங்கையில் வர்த்தகர்களுக்கு UPI ஒரு மதிப்புமிக்க கருவியாக இருக்க முடியும்.

UPI அமுலாக்கத்தில் இருந்து இலங்கையில் உள்ள வர்த்தகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இங்கே:

• உங்களின் UPI பின் இலக்கம்/pin number பாதுகாப்பானது என்பதையும் யாருடனும் பகிரவில்லை என்பதையும் உறுதிசெய்யவும். உங்கள் UPI பின் என்பது உங்கள் UPI கணக்கிற்கான அணுகலாகும். எனவே அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியம். உங்கள் பின்னை யாருடனும் அதாவது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

• பொது வைஃபை நெட்வொர்க்குகளில் உங்கள் UPI பின்னை உள்ளிடும்போது கவனமாக இருக்கவும். பொது வைஃபை நெட்வொர்க்குகள் எப்போதும் பாதுகாப்பாக இருக்காது. எனவே இந்த நெட்வொர்க்குகளில் உங்கள் UPI பின்னை உள்ளிடும் போது கவனமாக இருக்க வேண்டியது அவசியம். முடிந்தால், பொது வைஃபை நெட்வொர்க்குகளில் உங்கள் பின்னை உள்ளிடுவதைத் தவிர்க்கவும்.

• உங்கள் மொபைல் ஃபோனைப் பாதுகாப்பாக வைத்திருங்கள். அதை இழக்காதீர்கள். உங்கள் மொபைல் போன் உங்கள் UPI அணுகல் சாதனம். எனவே அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியம். மேலும் உங்கள் UPI கணக்கை அணுக வேறு யாரும் உங்கள் மொபைல் ஃபோனைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள்.

• உங்கள் UPI பரிவர்த்தனைகள் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்களைத் தவறாமல் கண்காணிக்கவும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் போன்ற சந்தேகத்திற்கிடமான செயல்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும்.

• உங்கள் UPI கணக்குத் திருடப்பட்டதாக நீங்கள் சந்தேகித்தால் அல்லது ஏதேனும் சந்தேகத்திற்குரிய செயற்பாட்டைக் கண்டால் உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும். உங்கள் வங்கியின் செயற்பாட்டை ஆராய்ந்து உங்கள் கணக்கைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் UPI கணக்கை மோசடி மற்றும் பிற நிதி அபாயங்களிலிருந்து பாதுகாக்க உதவலாம். UPIஐப் பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கான சில கூடுதல் குறிப்புகள் இங்கே:

• உங்கள் UPI கணக்கிற்கு வலுவான கடவுச்சொல்லைப் பயன்படுத்தவும்.

• உங்கள் UPI கணக்கிற்கு இரு காரணி அங்கீகாரத்தை இயக்கவும் (Two factor authentication). நீங்கள் உள்நுழையும் போது கடவுச்சொல்லுடன் கூடுதலாக உங்கள் தொலைபேசியிலிருந்து ஒரு குறியீட்டை உள்ளிடுவதன் மூலம் இரண்டு காரணி அங்கீகாரமானது உங்கள் கணக்கில் கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கிறது.

• உரைச் செய்திகள் அல்லது மின்னஞ்சல்களில் உள்ள இணைப்புகளைக் கிளிக் செய்யும்போது கவனமாக இருங்கள். மோசடி செய்பவர்கள் UPI பின்களைத் திருடுவதற்கு மின்-தூண்டிலிடல் (phishing) மோசடிகள் ஒரு பொதுவான வழியாகும். உங்கள் UPI பின்னை உள்ளிடும்படி கேட்கும் உரைச் செய்தி அல்லது மின்னஞ்சலைப் பெற்றால் செய்தியில் உள்ள எந்த இணைப்பையும் கிளிக் செய்ய வேண்டாம். அதற்குப் பதிலாக செய்தியின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க உங்கள் வங்கியோ நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

• உங்கள் UPI பயன்பாட்டைப் புதுப்பித்த நிலையில் வைத்திருங்கள். UPI பயன்பாடு தொடர்ந்து புதிய பாதுகாப்பு அம்சங்களுடன் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் சமீபத்திய பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த உங்கள் பயன்பாட்டைப் புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதை உறுதிசெய்யவும்.

இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் UPI கணக்கையும் உங்கள் நிதித் தகவலையும் பாதுகாக்க உதவலாம்.

இலங்கையில் யு.பி.ஐ / UPI இன் அறிமுகமானது நாட்டின் நிதி நிலைமையை மாற்றும் ஆற்றலைக் கொண்ட ஒரு பாரிய அபிவிருத்தியாகும். UPI என்பது மிகவும் அணுகக்கூடிய, திறமையான, மற்றும் செலவு குறைந்த கட்டண முறையாகும். இலங்கையில் UPI தொடர்ந்து வளர்ந்து வருவதால் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் இது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
06.08.2023



உப்பிடிக் கோயில் திருவிழாக்களிலை ஆன்மீகம், உளவியல், சமூகவியல் , பொருளியல் , அரசியல் எண்டு கனகாரணங்கள் பின்னிப்பிணைஞ்சு கிடந்ததாலதான் அந்தக்காலத்திலை எங்கடை ஔவையார் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எண்டு சொன்ன வாவாக்கும்.

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

ஒரு மனுசனுக்குக் கவலை துன்பம் துயரம் கூடக்கூட அவன்ரை மனப்பாரம் கூடும். இப்பிடி மனப்பாரம் கூடக்கூட மன அழுத்தம் கூடி கண்ட கிண்ட வாதை வருத்தங்களும் வரும். பேந்து ஆசுப்பத்திரிக்கு அலைய வேணும் டாக்குத்தர்மாருக்கு அள்ளிக்கொட்ட வேணும் எண்டுவா எங்கட அன்னம்மாக் குஞ்சாச்சி. அதால மனுசன் தன்ரை மனப்பாரத்தை இறக்க வேணும் சுகமாக வாழவேணும் எண்டு போட்டுத்தான் எங்கட ஆக்கள் ஊர்வழிய கோயிலைக் கட்டினவை. அதுமாதிரி அந்தச்சாமி இந்தச்சாமி அந்தவிரதம் இந்த விரதம் எண்டு நிறையத் திருவிழாக்களை உண்டாக்கி சனம் ஒண்டு கூட வழிபாடு செய்ய உறவாட வழி செய்தவை எண்டுவார் குஞ்சப்பு.

இப்பிடித் திருவிழாக்களைச் செய்யேக்கை ஆடல் பாடல் எண்டு கலைகளையும் சேர்த்துவைச்சவை. இப்பிடிக் கோயில் திருவிழாக்கள் ஆன்மீகத்துக்கு எண்டு மட்டும் இல்லாமல் கலைகள் வளருகிற இடங்களாகவும் இருக்கின்றன. இப்பிடியான திருவிழாக்களைச் செய்யிறதில ஆன்மீகக் காரணங்கள் மட்டும் இல்லை அதுக்குள்ளை உளவியல் , சமூகவியல், பண்பாட்டியல், பொருளியல், அரசியல் காரணங்களும் கலந்து கிடக்கெண்டுவார் எங்கட அப்பு.

மனுசர் ஒண்டு கூடிக் கும்பிடுறதாலை தங்கட கவலையை கடவுளிட்டை மட்டும் இல்லை தங்களுக்குத் தெரிஞ்சவைக்கும் சொல்லி மனப்பாரத்தைக் குறைச்சு மனசு ஆறுதல் அடைவினம். அதோட தங்கட சொந்த பந்தங்கள் தெரிஞ்சவை சிநேகிதர் எல்லாரையும் கண்டு கதைச்சு தங்கட உறவுகளைப் புதுப்பிப்பினம். இதால அவைக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைக்கும் இருக்கிற கவலையள் எல்லாம் பஞ்சாப் பறந்து போகும் . அங்க நடக்கிற சின்ன மேளம், நடனம், காவடி, நாடகம், கூத்து எண்டு கலை நிகழ்ச்சியளையும் மேளக் கச்சேரி பாட்டுக்கச்சேரியள் எண்டு நடக்கிற கச்சேரியளையும் பாத்து மனம் சந்தோசப் படுவினம். இது ஒரு பெரிய ஹீலிங் முறை சனத்தின்ரை மன அழுத்தத்தைக் குறைக்கும் எண்டு எங்கடை டாக்குத்தர் இளையாம்பி நெடுகச் சொல்லுறவர். அதோட அங்கை நடக்கிற கூட்டுப் பிரார்த்தனை பஜனை எண்டு சனத்தோட சேந்து இருந்து பாடக் காவடி ஆடுகிறவையோட சேந்து ஆட மனசு லேசாகும் எண்டுவார் அவர்.

அது மட்டும் இல்லாமல் திருவிழாவிலை கச்சேரி செய்யிறவை, கலை நிகழ்ச்சி செய்யிறவை, ஐயர், பண்டாரம், எடுபிடி எண்டு கோயில்லை வேலை செய்யிறவை, கோயிலுக்குத் திருவிழாக்களுக்கு சாமான் குடுக்கிறவை, திருவிழாவில சாமான்கள் விக்கிறவை , காவடிகாறர் , சப்பறகாறர், சாத்துப்படி காறர் எண்டு எல்லாருக்கும் நல்ல வருமானம் கிடைக்கும் அந்தக் குடும்பங்கள் எல்லாம் அந்தத் திருவிழாக்கலத்திலை நல்ல சந்தோசமா இருக்குங்கள் எண்டுவா எங்கடை ஆச்சி .அந்தக்காலத்தில அரசர்மார் கோயில்களைக்கட்டி அங்கை திருவிழாக்களைச் செய்யிறதை தங்கடை கவுரவமா நினைச்சவை. அதுமட்டும் இல்லை சனங்கள் இப்பிடித் திருவிழாக்களிலை ஐக்கியமாச்சினம் எண்டால் அரசாங்கத்துக்கெதிரா என்னமும் செய்யிறதுக்கு அவைக்கு நேரம் இருக்காது எண்டதும் அதிலை ஒரு நோக்கம் எண்டுவார் அப்பு. உண்ணாணச்சொல்ல வேணும் எண்டால் முந்தி கோயில் குளம் எண்டு திரிஞ்ச சனங்கள் ஒரு சோலி சுறட்டுக்கும் போறேல்லை எண்டது ஓரளவுக்கு உண்மை எண்டுதான் சொல்ல வேணும்.

உப்பிடிக் கோயில் திருவிழாக்களிலை ஆன்மீகம், உளவியல், சமூகவியல், பொருளியல், அரசியல் எண்டு கனகாரணங்கள் பின்னிப்பிணைஞ்சு கிடந்ததாலதான் அந்தக்காலத்திலை எங்கடை ஔவையார் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எண்டு சொன்னவவாக்கும் எண்டுவா ஆச்சி. ஆனால் சில கோயில்களுக்குப் போனால் அங்கை வேதாகம அறிவு குறைஞ்ச பூசை செய்யிறவையும், புதுக்கா சிலை உபயம் செய்யிறவையும், அறங்காவலர் எண்டு அலப்பறை செய்யிறவையும் செய்யிற கூத்துக்களைப் பாத்தா மனிசருக்கு மனப்பாரம் குறையாமல் கூடிப்போய் வாதை வருத்தங்கள் வந்து போடும் போல கிடக்கு எண்டு வாழைப்பழக் கடை ஆறுமுகத்தார் அப்பவே சொன்னவர்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2023இல் வெளியிடப்பெற்றது.